815

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 MAY 1958
MADRAS
815/278

தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6

மலர் 4 | சென்னை | 24-5-58 | சனிக்கிழமை | இதழ் 45

தமிழ்நாடு அரசு கன்னிமாரா பொது நூலகம் சென்னை-600 008
198384

"நமது கலாச்சாரம் எப்போது துவங்கியது? வடக்கே ஆரியர்கள் தாங்கள் வந்ததிலிருந்துதான் துவங்கியது என்கின்றனர். முஸ்லீம்கள் தாங்கள் வந்ததிலிருந்து தான் துவங்கியது என்கின்றனர். திராவிடர்களும் அம்மாதிரியே கூறுகின்றனர்..."

"ஆனால் உண்மையில் முதல் நீக்ரோ குடும்பம் இந்த தேசத்தில் என்று குடியேறியதோ அன்றிருந்தே இந்தியக் கலாச்சாரம் துவங்கியது. பின்னர் ஆரியர்களும் திராவிடர்களும் வந்தனர். பின்னர் ஹூணர்களும், மங்கோலியர்களும், அராபியர்களும் உலகின் பல பகுதிகளிலிருந்து இந்தியாவிற்குள் வந்தனர்..."

"இந்த தேசத்தைத் தங்கள் தாயகமாக்கிக்கொள்ள வேண்டுமென்றே அவர்கள் இங்கு குடியேறினர். அவர்கள் தங்களுடன், தங்கள் மதம், கலாச்சாரம், தொழில், விஞ்ஞான அறிவு, பழக்க வழக்கங்கள் அனைத்தையும் கொண்டு வந்தனர்..."

24-4-58 அன்று மதுரை, 'சிந்தாமணி' தியேட்டரில் நடந்த காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபர் வழங்கிய கருத்துரைகள் மேலே தரப்பட்டிருக்கிறது.

இலக்கியத்தையும், வரலாற்றையும் சிறிதும் படிக்காமலும், ஆராயாமலும், ஆகாயக்கோட்டைகளை ஆராய்ச்சித்துறையில் கட்டுவது அரசியல் தலைவர்களுக்கு அழகன்று.

அறியாமையின் விளைவுதான் இத்தகுவாசகங்கள் என்று எண்ணுகிறோம். "இந்த உண்மையைக்கூட இன்னமும் இவர் அறிந்தாரில்லையே—!!" என்று பரிதாபப்படுகிறோம்.

ஆயிரமாயிரம் மேடைகளில், பேருக்கணக்கான மக்களிடம், மொழி, வரலாறு, நிலநூல் இலக்கியம், புதைபொருள், மேற்கோளுடன் திராவிட குடியேற்றக் கொள்கைகள் விளக்கப்பட்டிருக்கிறது.

"நாம் அவர்கள் கழகமல்ல" எனவே அவர்கள் தரும் கருத்துக்களை மறுத்தாகவேண்டும் என்ற போக்கிலுள்ள பேரறிவாளர்களும்; வரலாற்றிற்கு எட்டாத இருண்ட காலத்தின முழு உருவத்தையும் கண்டாலன்றி உண்மையை ஒப்புக்கொள்ள இயலாது என்று கூறுவோரும் சிந்தித்துத் தெளிவுபெற வேண்டுகிறோம்.

ஆரியர்கள் இந்தியாவில் குடியேறுவதற்கு ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பே திராவிடர்கள் அங்கு நாகரிகமான வாழ்வு நடத்தி வந்தனர்! ஒழுங்காக வீடுகளைக் கட்டி, ஒழுங்காக தெருக்களையும். ஊர்களையும் அமைத்து, சிறந்த கருவிகளைச் செய்து எழுத்து முறை வைத்துக்கொண்டு கலைகளையும் வளர்த்து வந்திருக்கின்றனர்!

இதோ, எச். ஜி. வெல்ஸ் கூறுவதை படியுங்கள்:—

★

"இந்தியாவின் பழங்காலச் சரித்திரம் இன்னும் தெளிவில்லாமல் இன்றைக்கு ஏறக்குறைய கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு, ஆரியம் பேசுகின்ற மக்கள், வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் வந்தனர். அவர்கள் ஒரே படையெடுப்பாலோ; தொடர்ந்த பல படையெடுப்புகளின் காரணமாகவோ; இந்தியாவில் குடியேறியிருக்கலாம். அவர்கள் தங்கள் மொழியையும், கலாச்சாரத்தையும் வட இந்தியா முழுவதும் பரப்பினார்கள். அவர்கள் பேசும் மொழி 'சமஸ்கிருதம்' ஆகும். அவர்கள் இந்து, கங்கை, சமவெளிகளில், தங்களைவிட விரிந்த கலாச்சாரமும், மன உறுதி இல்லாத ஒருவித கருநிற மக்களைக் கண்டார்கள்."

உலகத்தோடு பிறந்த இனம்

ஆரியர்கள் வந்து குடியேறினதும் திராவிட மக்களுடன் கலந்து, அவர்களின் நாகரிக வளர்ச்சியையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொண்டனர்.

அவரே இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார்:

★ கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னால், சமஸ்கிருதம் பேசுகின்ற ஆரியர்கள் வடமேற்குக் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். அவர்கள் அங்கு வசித்துவந்த தொன்மையான நாகரிகமுடைய திராவிடர்களுடன் கலந்தார்கள். அவர்களிடமிருந்து எவ்வளவோ கற்றுக்கொண்டார்கள்."

நேரு பண்டிதர் தாம் எழுதிய "உலகச் சரித்திரத்தில் இவ்வாறு கூறுகிறார்:

★ "ஆரியர்கள் இந்தியாவில் நுழைவதற்கு முன்பே இந்தியா, நாகரிக வளர்ச்சியடைந்திருந்தது. வடமேற்கிலுள்ள 'மொஹஞ்சதாரே" கண்டுபிடிப்புகளிலிருந்து இது இப்பொழுது தெளிவாகின்றது. தென்னிந்தியாவில் மட்டுமல்ல வடஇந்தியாவிலும், திராவிட நாகரிகம் பரவி இருந்தது."

ஆரியர்கள் வருவதற்குமுன் திராவிட மொழி இந்திய நாடு முழுவதும் பரவி இருந்தது. திராவிட மொழியை ஒட்டி புதிய எழுத்து முறையை ஆரியர்கள் வகுத்தனர். கலப்பான மொழியிலிருந்து திருத்தமான இலக்கிய மொழி ஒன்றும் வகுத்துக் கொண்டனர்.

எஸ். கே. சட்டர்ஜி கூறுவது போல்:

★ திராவிடமொழி பேசுகின்ற மக்கள், ஒரு காலத்தில் வட இந்தியா முழுவதும் பரவி இருந்தார்கள். பெலூசிஸ்தானிலிருந்து வங்காளம்வரை அவர்கள் மொழி பேசப்பட்டது."

வடமேற்குக் கணவாய் வழியாக ஆரிய வாடை இந்தியாவிற்குள் புகுந்தது. அவர்கள் ஆட்டையும், மாட்டையும் ஓட்டிக்கொண்டு வந்தனர். ஆரியர்கள் புகுவதற்கு பன்னூருயிரம் வருடங்களுக்குமுன்பே, நாம் கழகங்கள் வைத்து கலை வளர்த்திருக்கிறோம். திராவிடக் கலாச்சாரம் சுமந்து சென்றன நமது கலங்கள்-கடல் கடந்த நாடுகளுக்கு!

ஆரியர்கள் வருகைக்குப் பின்பு, ஹூனர்கள் படைகொண்டு வந்தனர். அப்பொழுது ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த ஸ்கந்த குப்தனால் அவர்களை அடக்கி ஓட்ட முடியவில்லை. கூட்டம் கூட்டமாக இந்தியா முழுவதும் பரவத் தொடங்கினார்கள். அவர்களது தலைவன் "தோரமான்" (Toroman) அரசனாக முடி சூட்டிக்கொண்டான்.

மங்கோலியர்களும் இந்தியாவிற்குள் படை கொண்டுவந்திருக்கின்றனர்.

அராபியர்கள் இந்தியாவில் நுழைந்ததே ஏழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான், அப்பொழுது இந்தியாவை ஹர்ஷவர்த்தனன் ஆண்டுகொண்டிருந்தான். 'ஹூன்சாங்' இந்தியாவிற்கு வந்ததும் இந்தக் காலப்பொழுதில் தான். அவர்கள் ஹீரட், காபூல், வழியாக இந்துநதி வரை வந்தார்கள். சிந்தைக் கைப்பற்றினார்கள். ஆனால் அவர்கள், இந்துநதியைக் கடந்து இந்தியாவில் நுழையவில்லை. கி. பி. 710 ல் முகமது இபின்காஸிம், சிந்துநதிதிரத்தைக் கைப்பற்றினன். மூல்டான் பஞ்சாபையும் தன் ஆட்சிக்குட்படுத்தினன்.

புல் இருக்குமிடமெல்லாம் ஆடு, மாடுகளை ஓட்டிச் செல்லும் ஆரிய இனம் திராவிட இந்தியாவிற்குள் புகுந்த பிறகு இந்த உபகண்டத்திற்குள் நுழைந்த குறிப்பிடத் தகுந்த அன்னியர்கள் பாரசிகர்கள், அலெக்சாண்டர், சாக்கியர்கள், குஷான்கள், ஹூணர்கள், கில்ஜிகள், துக்ளக்குகள், லோடிகள், மொகலாயர்கள் ஆவார்கள்.

ஆனால் இவர்கள் திராவிட இந்தியாவில் நுழைந்த பிறகுதான் இந்தியக் கலாச்சாரம் துவங்கியது என்று கூறுவது. வரலாறு தெரியாதவர்களின் கூற்றாகத்தான் இருக்கமுடியும்.

ஆரியர்கள், முஸ்லீம்கள், மங்கோலியர்கள், ஹூணர்கள், இவர்களோடு திராவிடர்களையும் ஒப்பிடுகிறார் தேபர்ஜி.

இதிலிருந்து திராவிடர்களும், சொந்த நாடற்றவர்கள், சொந்தக் கலாச்சாரம் இல்லாதவர்கள், அவர்கள் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்பே இந்தியக் கலாச்சாரம் துவங்கிவிட்டது என்பது பெறப்படுகிறது.

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்தகுடி

M211, NSUTL

நமது தமிழ்க்குடி என்று பெருமைப் படுபவர்கள் நாம்? திங்களொடும் செழும்பரிதி தன்னோடும், விண்ணோடும், உடுக்களோடும், மங்குல், கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்; ஆண்மைச் சிங்கத்தின் கூட்டம் என்று இறுமாந்து கிடப்பவர்கள் நாம்.

நம்மைப் பார்த்து இழிச் சொல் வீசியிருக்கிறார்—சொந்த நாடற்றவர்கள், கலாச்சாரம் தெரியாதவர்கள் என்று!

வேடிக்கை!

முதல் நீக்ரோக் குடும்பம் இந்தியாவில் குடியேறின பிறகுதான் இந்தியக் கலாச்சாரம் துவங்கியது என்றால் முதல் நீக்ரோக்கள் இந்தியாவில் குடியேறுவதற்கு முன்னால் அதுகாறும் இந்தியாவில் எந்த வகுப்பார்கள் இருந்தார்கள் என்று தேபர்ஜி குறிப்பிடவில்லை!

திராவிடர்கள், வெளி நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் புகுந்தார்கள் என்றால், அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதுபற்றியும் அவர் கூறவில்லை!

இந்தக் கூற்றை ஆராய்ந்துமுடிவு கூற முதன் முதலில் மக்கள் இனம் எங்கே தோன்றியது என்பது தெரிய வேண்டும்.

எர்னஸ்டு ஹெக்கல் என்ற ஜெர்மானியார் தாம் எழுதிய "படைப்பின் வரலாறு" என்ற நூலில் குமரி முனைக்குத் தெற்கே உள்ள ஞாலத்தில் நடுக் கோட்டிற்கு இரு மருங்குமிருந்த பகுதிகளே மக்கள் வாழ்வதற்கு தக்க நிலையை முதற் கண் அடைந்தன என்றும், அவண் மக்கள் முதற் கண் தோன்றி வளர்ந்து நாகரிகத்திற்கு வித்திட்டனர் என்றும் எழுதியுள்ளார்.

தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், உள்ள பாறைகள் மிகவும் பழமையான காலத்தில் உண்டாயின என்றும், ஒரு பெரிய மலைத் தொடர் இந்தியாவின் மேலைக்கரையிலிருந்து தெற்கே சென்று, மேற்கு கிழக்காக நீண்டு நின்றது என்றும் 'இழந்த இலெமூரியா' எனும் நூலில் ஸ்காட் எலியட் என்பார் கூறியுள்ளார்.

"சரித்திர காலத்திற்குப் பிற்பட்ட தென் இந்தியா" எனும் நூலில் வி. ஆர். ஆர். தீட்சிதர் இவ்வாறு கூறுகிறார்:

★ "வட இந்தியாவைப்போல தென்னிந்தியாவில் அடிக்கடி எரிமலைகள் வெடித்ததில்லை. நிலநடுக்கம் ஏற்பட்டதில்லை. ஆகையால் முதன் முதலில் மக்கள் இனம் வாழ்வதற்கு பண்பட்ட இடமாக அமைந்திருந்தது தென் இந்தியாவாகும். முதல் மனிதன் பிறந்து வளர்ந்ததும் தென்னிந்தியாவாகும்."

மக்கள் முதன் முதலில் தோன்றிய இடம் "இலெமூரியா" அல்லது தென் இந்தியா என்பது இதனால் பெறப்படுகிறது. அது இந்தியக் கடலில் இருந்து அழிந்தது என்றும், அழிந்தபின் மக்கள் பல்வேறு திசைகளில் சென்று குடியேறினர் என்றும், ஐரோப்பாவில் சேர்ந்தவர் ஐரோப்பியர் என்றும், ஆப்பிரிக்காவில் சிதறிச் சென்றவர் ஆப்பிரிக்கர் என்றும், இந்தியாவைச் சேர்ந்தவர் இந்தியர் என்றும், ஜாவா, சுமத்ரா வழியாக, சீனா முதலிய பகுதிகளுக்குச் சென்றவர் மங்கோலியர் என்றும் இவ்வாறு பலதிறப்பட்ட மக்களாக வாழ நேரிட்டது என்பர்.

இதோ ரெவரண்டுஹீராஸ்-கூறுவதைப் படியுங்கள்:—

★ "திராவிடர்கள் இந்தியாவில் பல காலம் நாகரிக வளர்ச்சியுடன் வாழ்ந்த பிறகு கிழக்கு நோக்கிச் சென்று, வேறு பல நாடுகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள். அவர்கள் மெசபடோமியாவிலிருந்து இங்கிலாந்துவரை தங்கள் இனத்தைப் பரப்பினார்கள். அதன் பிறகு அவர்கள் தங்களை மத்திய தரைக்கடல் நாகரிக மக்கள் என்று நிலத்திற்கேற்றாற்போல் கூறிக்கொண்டார்கள். கிழக்கு வழியாக புறப்பட்ட இவர்கள் இரண்டு பெரும் கண்டங்களில் தங்கள் நாகரிகத்தைப் பரப்பினார்கள். இவர்கள் மனித நாகரிகத்திற்கு வித்திட்ட உத்தமர்கள். இந்த உண்மையை நாம் கட்டாயம் ஒப்புக்கொள்ள வேண்டும்"

இலெமூரியா என்று கூறப்படும் அந்த நிலப்பரப்பே குமரிக் கண்டம் என்று தமிழிலக்கியத்தில் அறியப்படும் பகுதியாகும். அங்கே குமரி மலை என்று ஒரு மலை இருந்தது என்றும், பஃறுளி ஆறு என்று ஒரு ஆறு ஓடியது என்றும் பழந்தமிழ் பாட்டுக்கள் அறிவிக்கின்றன.

"வடிவேல் எறிந்த
வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன்
பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள"
—சிலப்பதிகாரம் காடுகாண் காதை

"தென்னாஅ துருகெழு
குமரியின் தெற்கும்"
—புறநானூறு

"நெடியோன் நன்னீர்
பஃறுளி மணலினும் பலவே"
—புறநானூறு

அந்த ஆறும் மலையும் இருந்த பழங்காலம், இமய மலையும், கங்கையாறும் தோன்றாமல் இந்தியாவின் வடகோடி கடற் பகுதியாக இருந்த காலமாகும், அத்தகு குமரிக் கண்டத்தில் முதன் முதலில் மக்கள் இருந்தனர். அவர்கள் பேசிய மொழியே முதன் மொழியென்றும், திராவிடர் அல்லது பழந்தமிழரே முதலில் தோன்றிய மக்கள் எனவும், பழந்தமிழே முதலில் பேசப்பட்ட மொழி என்றும் பெறப்படுகிறது.

"மொஹஞ்சதாரோ" வளர்த்த பழந்தமிழ் நாகரிகமே மத்தியதரைக் கடலை அடுத்த பகுதிகளில் எகிப்து நாகரிகம், போனீசிய நாகரிகம், கிரேக்க நாகரிகம், முதலியன வளரக் காரணமாயிருந்தது என்றும், பழந்தமிழ் மக்களின் வழித்தோன்றலே ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பியரும், மற்று இனத்தவர்களும் ஆவர் என்றும் பெறப்படுகிறது.

இந்தக் கூற்றை ஐயந்திரிபற ஆராய்ந்து முடிவுகட்டியிருக்கிறார்—தீட்சிதர்.

★ "திராவிடர்கள் கடற்பயணம் செய்வதில் வல்லவர்கள். ஆகையால் அவர்கள் கடல்கடந்த பல நாடுகளுக்கு அவர்கள் கலைச்செல்வத்தை வாரிச்சென்றிருக்க வேண்டும். கிரீட்டன், ஆகியன் கலாச்சாரத்தை வளப்படுத்தியவர்களும் இவர்கள்தான். திராவிடக் கலாச்சாரம் மெசபடோமியா, லிசியா, வேறு பல நாடுகளுக்கும் 'சலசல' என பாய்ச்சிவிடபபட்டது. மொகஞ்சதாராவிலும், ஹாரப்பாவிலும் வளர்ந்துவந்த திராவிட நாகரிகம், கடல் வழியாகவும், தரை வழியாகவும் மத்தியதரைகடல் நாடுகளுக்குச் சென்றிருக்கவேண்டும். தென்னிந்தியாவில் கண்டு எடுக்கப்பட்டுள்ள பொருட்களும், மத்தியதரை நாடுகளில் கண்டு எடுக்கப்பட்ட பொருட்களும், ஒரே விதமாகக் காணப்படுகின்றன."

புராதன இந்தியாவின், கலைச் செல்வங்களைக் காண வேண்டுமானால் தென் இந்தியாவிற்குத்தான் போக வேண்டும்" என்று கூறுகிறார் நேரு பண்டிதர். (If you want to see specimens of old Indian art now, you have to go to South India...") தேபர் இங்குள்ள கலைச் செல்வங்களை பார்க்க வந்தாரோ என்னவோ-வந்ததும் வராததுமாக திராவிடர்களை மட்டும் சாடிவிட்டுச் சென்றிருக்கிறார்.

தமிழகம்-திராவிடம்-கலைத்தோட்டம். அதன் வரலாற்று தொன்மை கண்டு தேபர்ஜி அரற்றிக்கொள்கிறார் ஏதேதோ புலம்புகிறார். ஆனால் குடையைக் கொண்டு குவலயத்தை மறைக்கமுடியுமா?

உலகத்திற்கே நாகரிகம் வழங்கிய நாம் இன்று கேலி செய்யப்படுகிறோம். காரணம் என்ன? தமிழர்கள் மூன்று கோடி பேர்களாக குறுகிவிட்டார்கள். மூன்று கோடிக்குள் முப்பதினாயிரம் பிரிவுகள். மொழி ஆர்வம் குன்றிவிட்டது. அயல்மொழி மோகம் நஞ்சுபோல் ஏறுகிறது. திராவிடத் தோழனே! விழி திற! தலைநிமிர்! உன்னைச் சூழ்ந்திருக்கும் குள்ளநரிக் கூட்டத்திற்குக் கூற்றமெனப் புறப்படு! மொழிகாக்க பச்சை இரத்தம் பரிமாறு! "கொலைவாளினை எடடா, கொடியோர் செயல் அறவே; குகை வாழ்ந்திடும் புலியே, அதன் குணமேவிய தமிழா!"

—சிவம்.

டாக்டர்

சிதம்பரநாதனுருக்குப் பாராட்டு விழா

கோவை முத்தமிழ்க் கலைமன்றத்தின் சார்பாக 4-5-58 ஞாயிறு பகல் 1 மணிக்கு கீதா ஆலில் பாராட்டு விருந்தொன்றும் — விழாவும், சீரும் சிறப்புமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்தில் பல தமிழ்ப் பேரறிஞர்களும், தமிழ்ப் புலவர்களும், கழகத் தோழர்களும், பொது மக்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் கீதா ஆல் கொட்டகைக்கு உள்ளேயும்-வெளியேயும் கூடியிருந்தனர். விழாவிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்த்துறை - மொழித்துறை முனைவர் உயர்திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமை வகித்தார்.

மன்றத் தலைவர் புலவர் மருதவாணன் வந்திருந்தோரை வரவேற்றும்-விழாவின் நோக்கத்தினையும் - அவசியத்தினையும் விளக்கியபின்-தலைவர் அவர்கள் டாக்டர். அ. சிதம்பரநாதனுரைப் பாராட்டியும், தமிழ் - தமிழரின் சிறப்பு குறித்தும் - திராவிடர் நிலை குறித்தும், சிறந்ததொரு கருத்துரையாற்றியபின், மன்றத்தின் சார்பில் "வாழ்த்துப் பா" பாடி டாக்டருக்கு அளிக்கப்பட்டதும், பலத்த கையொலிகளுக்கும், ஆரவாரத்திற்குமிடையே தி. மு க. பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேச எழுந்தார். பொதுச் செயலாளர் அவர்கள் சிதம்பரநாதனாருடைய தமிழ்த்தொண்டு, தமிழ் ஆர்வம் குறித்தும், தாம் மாணவராக இருந்த போது அவர் ஆற்றிய நற்றொண்டுகள் குறித்தும்-அவர் ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் விரிவாகவும்-விளக்கமாகவும் 1 மணி நேரம் உரையாற்றியபின் டாக்டர் அவர்கள் தம் நன்றியுரையில் பொதுச் செயலாளர் அவர்கள் தம் மாணவர் என்று சொல்லிக் கொள்வதில் தாம் பெருமையடைவதாகவும் - நாவலருடைய நாவன்மையையும் - தமிழ்த் தொண்டையும்-நாட்டுப் பற்றையும் - அயராத உழைப்பையும் பாராட்டியும்-புகழ்ந்தும்-தமக்குப் பாராட்டளித்தமைக்கு நன்றி தெரிவித்தும் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், மன்றச் செயலாளர் வெ. கிருட்டிணமூர்த்தி நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

வெண்பாப் போட்டி-18.

ஈற்றடி:

வீரனையே தேடி விரும்பு.

முடிவு தேதி 31-5-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 | 24—5—58 | இதழ் 45

நேருவின் நெஞ்சம்...

"விலகப் போகிறேன் என்று அறிவித்தேன். பிறகு, ஓய்வு பெறப் போகிறேன் என்று அறிக்கை வெளியிட்டேன். என்னுடைய திடீர் அறிக்கை கண்டு இந்தியத் துணைக் கண்டமே அதிர்ச்சியுறும், கலங்கும், கண்ணீர் வடிக்கும் என்றெல்லாம் நான் கனவு கண்டுகொண்டிருந்தேன். எதுவும் நடைபெறவில்லை. எந்தத் தலைவரும் என்னுடைய அறிக்கைக்குப் பொறுப்பான அறிக்கை விடவில்லை. நான் விலகினுல் இந்தியாவுக்கு ஆபத்து என்று சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். யாரும் எதுவும் சொல்லவில்லை. நேருவின் தலைமை இந்தியாவுக்கு அவசியம்தான் என்று சொல்லிவிட்டு, எப்படியும் நேருவுக்குப் பிறகு ஒரு தலைவர் தேவையில்லையா என்று எழுத முற்பட்டார்கள். என்னுடைய காலத்தில் நானே ஒரு தலைவரை உருவாக்க வேண்டுமாம்! தமிழ் நாட்டுத் தேசீயத் தினசரிகள் அனைத்தும் இப்படியே எழுதி முடித்தன. யார் என்னைக் கெஞ்சினுர்களோ என்னுடைய ஓய்வினுல் யாருக்கு ஆபத்தோ, யாருடைய பதவி கிழிக்கப்படுமோ அவர்கள்தான் எனக்காகப் பரிந்து பேசினுர்கள்.

உண்மையிலேயே எனக்கு விலக வேண்டுமென்ற நோக்கமா என்ருல் இல்லை! யார் என்னுடைய அறிக்கை கண்டதும் துடிப்பார்கள் என்று நினைத்தேனே அவர்கள் அனைவருமே வாயைத் திறக்கவில்லை.

காமராஜ் எதுவும் சொல்லவில்லை. சுப்ரமணியம் சொல்லவில்லை. தென்னுட்டிலேதான் இப்படியென்ருல் வடநாட்டிலேயாவது துக்கம் கிளம்ப வேண்டாமா? இல்லை! எங்கும் மௌனம்!

என்னுடைய அறிக்கையில் ஒரு பெரும் குழப்பம் இருந்தது. அதைப் புரிந்துகொண்டவர்கள் தென்னுட்டுக்காரர்கள்தான். முதல் நாள் விலகப் போகிறேன் என்றேன். இரண்டாம் நாள் ஓய்வுதான், விலகல் அல்ல என்றேன். உண்மையிலேயே நான் குழம்பவில்லை. குழம்ப வைத்தேன் மற்றவர்களை! உண்மையாகவே நான் விலகுவதாகவோ, ஓய்வு பெறுவதாகவோ, எண்ணியிருந்தால் குழம்பியிருக்கத் தேவையில்லை. என்னை எப்படி இந்தியத் துணைக்கண்டமும் காங்கிரசும் கருதுகிறது என்று சோதித்துப் பார்த்தேன். சோதனை எனக்கொரு முடிவைத் தந்தது. இனிமேல், நான் விலகிக்கொள்ளப் போவதாக அறிவிக்கமாட்டேன். இப்போது ஓய்வு பெறுகிறேன். அது வெறும் இடைவேளை ஓய்வுதான். இந்த ஓய்வு எனக்குப் பெருங் கவலையாகவே கழியும். ஏன் தெரியுமா? இந்தியாவின் அபிமானத்தைப் பெறஏதாவது புது வழி இருக்கிறதா என்று கண்டுபிடித்தேயாக வேண்டிய நிலைக்கு நான் வந்துவிட்டேன்.

ஏனே தெரியவில்லை, இப்போது என் உள்ளத்தில் பலவீனம் குடியேறிவிட்டது. முன்பெல்லாம், என்னைத் துச்சமென மதித்தவர்களை நான் பழிவாங்கவே நினைப்பதுண்டு. இப்போது அந்தப் பிடிவாதம் இறந்துவிட்டது. மராட்டிய மண்டலத்தில் என்னை அவமதித்தார்கள். என்படத்திற்குச்செருப்பு மாலை போட்டார்கள். ஆனுல் அவர்களின் அழைப்பினைப் பெற்று சிவாஜியின் சிலையைத் திறந்து வைக்கப் போனபோது நான் என்னையும் அறியாமல் மராட்டியர்களைப் பாராட்டிப் பேசிவிட்டேன். உண்மையிலேயே, மராட்டியப் பகுதியினரை எதிர்க்கமுடியாமல்தான் அவர்களைப் புகழ்தேன். ஆனுல் நாட்டில் அதைப்பற்றி என்ன பேசிக்கொண்டார்கள் தெரியுமா? நேருஜி பெரிய ராஜதந்திரி என்ருர்கள். எதிரியைப் புகழும் பண்பாடுடையவர்கள் என்று வர்ணிக்கத் தலைப்பட்டார்கள்.

இதைப்போலவே இன்னெரு சம்பவமொன்று நடைபெற்றது. அண்மையில் நான் கேரளப் பகுதிக்குப் போயிருந்தேன். கேரளத்தார் என்னை எதற்காக அழைத்தார்கள்? தேர்தலில் கம்யூனிஸ்டுகளைத் தோற்கடிக்கப்பதற்காகப் பேச அழைத்தார்கள். ஆனுல் நான் அங்கே போனதும் என்னையும் அறியாமல் எனக்கு ஒரு நடுக்கம் கண்டுவிட்டது. கம்யூனிஸ்டுகளைப் பாராட்டிப் பேசிவிட்டேன். இந்த நிலைமை நீடித்தால், எனக்கென்று இருந்த கொள்கை அழிந்து, நான் எதையும் பேசுவேன் என்ற கீழ்நிலை உண்டாகிவிடுமோ என்று அடிக்கடி பயந்துகொண்டிருக்கிறேன். செல்வாக்கின் உச்சக்கட்டத்தில் இருந்தவர்கள் தூக்கியெறியப்பட்ட கதைகள் என்னைப் பயமுறுத்திக்கொண்டிருக்கின்றன.

என்னைக் காட்டிலும் அரசியல் ராஜதந்திரிகள், புத்திசாலிகள் உயிரோடிருந்த காலத்திலேகூட தப்பித்துவிட்டேன். இப்போது எனக்குப் பிறகு வேறு ஆள் இல்லை; திறமைசாலி கிடையாது. என்னை எதிர்த்துப் போட்டியிட எவருக்கும் துணிச்சல் இல்லை. ஆனுலும் பொதுமக்கள் இடத்தில் எனக்குச் செல்வாக்குக் குறைந்துவருகிறது. என்னைத் தூக்கியெறிந்துவிட்டு யாரை நம்பப்போகிருர்கள்? அதற்கும், ஆளில்லை! இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியலில் இது ஒரு புதிராகவே இருக்கிறது.

இந்தியாவின் தென்பகுதி சிவந்திருக்கிறது. வடநாட்டிலே காங்கிரஸ் களங்கள் மூழ்கி மூழ்கி எழுந்திருக்கின்றன. நானே ஓய்வுபெறுகிறேன். ஒரு காலத்திலே எந்தச் சிறையில்-எந்த மலையடிவாரத்தில் வதையுண்டு இந்தியாவை நம்பிக்கொண்டு உற்சாகத்தோடு இருந்தேனே, அதே மலையடிவாரத்தில் இப்போது சுதந்திரக் கைதியாக வந்திருக்கிறேன். அன்று சிறையிலிருந்தபோது இருந்த எழுச்சி, மகிழ்ச்சி, இன்று பதவியிலிருக்கும்போது இல்லை. காரணம் என்ன? நான் பணக்காரன் என்ற அகந்தையில் வாழ்ந்ததுதானு? சிறுபான்மை மக்களின் எண்ணங்களை புறக்கணித்ததுதானு? விடை தெரியாமல் திகைக்கிறேன். நான் எழுதிய உலக சரித்திரத்தை இப்போது படித்துப் பார்க்கிறேன். புதிய ஆசிரியரின் அரிய நூலொன்றைப் படிப்பதுபோல் படுகிறது. நான் அவ்வளவு மாறிவிட்டேன். காலம் ஓடுகிறது. ஓடியாடி வேலை செய்யாமலே புதுமை வருகிறது."

பி. பா. பிரிவு

நீதிக்கட்சிக் காலந்தொட்டு திராவிடர் இயக்கத்தில் பற்றும், பாசமும் கொண்டு இடைவிடாது பணியாற்றி வந்தவரும், 'சண்டே அப்சர்வர்' ஆங்கில வார இதழின் ஆசிரியருமான பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், தமது 58-வது வயதில் வியாழன் காலை 8-மணியளவில் இயற்கையெய்தினுர் என்ற செய்தியை அறிவிக்க மிக வருந்துகிருேம்.

கடந்த சிலகாலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்த அவர், மீண்டும் உடல்நலம் பெற்றுவருவதாகவே நமக்குத் தகவல் தரப்பட்டு வந்தது; எனினும், வியாழன் காலை அவர் மாரடைபால் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டார் என்ற செய்தி, நம்மைத் திடுக்கிட வைத்துவிட்டது.

செய்தியறிந்ததும், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், மறைந்த அத்தலைவருக்கு இறுதி வணக்கம் செலுத்த, இராயப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு விரைந்தனர்.

பின்னர், கழக சட்டமன்ற உறுப்பினர்களான மு. கருணுநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சத்தியவாணி-முத்து ஆகியோரும், மறைவு கேட்டு உடன் இல்லம் வந்தடைந்தனர்.

கழகத்தின் சார்பில், பொதுச்செயலாளர் அவர்கள், மறைந்த அத்தலைவருக்கு மலர் மாலை அணிவித்து, இறுதி வணக்கம் செலுத்தினுர்.

தொடர்ந்து, என். வி. நடராசன், மு. கருணுநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சத்தியவாணி-முத்து, அலமேலு-அப்பாதுரை முதலியோரும் மலர் மாலைகள் அணிவித்து, தங்களது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி எம்.பி., நகரசபைத் துணை ஆணையாளர் என். சங்கரன் முதலியோரும், இல்லம் வந்து தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

மறைந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்களது சடலம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, இல்லத்தின் முன்வாயிலில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

மறைவு கேட்ட கழகத் தோழர்கள் பலரும், பொதுமக்களும், மறைந்த வீரரைக் காண ஏராளமாகக் கூடினர்.

மறைந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்களது சவம் சென்னை-மவுண்ட்ரோடு, பாட்டர் தோட்டம் மோகன்தாஸ் ரோட்டிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இரவு 8-மணியளவில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, கிருஷ்ணும்பேட்டை இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.

அவரது மறைவால் துயருறும், அவரது துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

[ஆ-ர்.]

★ மொழிச்சிக்கலில் உதிர்ந்த முத்துக்கள் ★

பொது மொழி

"மத வேற்றுமைகளை மறந்த பிறகே நாம் மொழிச்சிக்கல் குறித்து ஆராய முனையவேண்டும்!"

"ஓர் லிபியையே, அல்லது ஒரு சார்பான இந்தியை மட்டுமோ பலவந்தமாக எந்த மாகாணத்திலும், அல்லது எந்த மாவட்டத்திலும், அல்லது எந்த மக்களிடையிலும் திணிக்க முயல்வது நாட்டு நன்மைக்கே பெரும் கேடு விளைவிப்பதாகவே முடிந்துவிடும்."

"பொது மொழியைப் பரப்ப வேண்டும் என்பதின் நோக்கம், மாகாணங்களுக்கு இடையில் நல்ல தொடர்பு ஏற்படுத்துவதை முன்னிட்டே ஆகும்!"

"நான் ஏன் பொது மொழி வேண்டுமென்று மிகவும் கூறி வருகிறேன் என்றால் பொது மொழியானது, நம்முடைய நாட்டு ஒற்றுமையை வளர்ப்பதற்கு ஒரு வலுவான கருவியாக உதவும் என்பதினாலேயே ஆகும்!"

மேலே கண்டவாறு காந்தியார் கூறியுள்ளார்; இந்தியை ஆட்சிமொழியாக்குவதின்மூலம் ஒற்றுமை வளர்கிறதா, வேற்றுமையும் வெறுப்புந்தான் மேலும் மேலும் வளர்கிறதா வென்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

"மேல்நாட்டுக் கலைச்செல்வங்களை நாம் அனுபவிப்பதற்காகவும், மேல்நாடுகளிலே பெரும்பாலோர் அறிந்திருக்கும் ஆங்கில மொழி, நம்மில் சிலருக்குத் தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்!" - என்று ஆங்கிலத்தின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தி:

இந்தி என்ற பெயர் அசலானதல்ல! இந்தப் பெயர் முஸ்லீம்களாலேயே அந்த மொழிக்குச் சூட்டப்பட்டதாகும்!

மௌலானா ஆசாத்:

"எப்படியோ ஆங்கிலம் இந்தியாவில் நுழைந்துவிட்டது. நம்முடைய உள்ளத்தையும் கல்வியையும் அது கடந்த 150 ஆண்டுகளாக உருவாக்கியுள்ளது. ஓர் சில திங்குகள் நேர்ந்தாலும், அது பலப்பல நன்மைகளை நமக்கு நல்கியுள்ளது! நாம் அதற்கு உடனே நன்றி செலுத்த வேண்டும்! நாம் விடுதலை அடைந்தவுடன் நம்மை எதிர்த்த இன்னல்கள் எல்லாம், நாம் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகக் கொண்டதினால் ஓடி மறைந்தன! அது இந்தியாவின் ஒற்றுமைக்கே அடிகோலியது. தொலைவில் உள்ள பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்களை எல்லாம் ஒன்று சேர்த்தது. மொகலாயர்களை பெர்சிய மொழி எப்படி ஒன்று சேர்த்ததோ, அப்படி ஆங்கிலம் இந்தியர்களை ஒன்றுபடுத்தியது! **நமது நாடு ஓர் உபகண்டமாகும்! ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு தனித்தன்மை (entity) உடையதாகும்!......** ஆனால் ஆங்கிலம்தான் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒன்றாக இணைத்தது!"

"ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுடனும்; அதனுடைய கண்டுபிடிப்புகளுடனும் தொடர்பு கொள்ள ஆங்கிலம் அவசியமே! ஆசியாவிலும் கிழக்கு நாடுகளிலும் உள்ள பள்ளிகளில் ஆங்கிலம் மிகவும் உன்னதமான இடத்தை வகிக்கிறது! வெளிநாடுகளுடன் தொடர்புகொள்ள அதுதான் பயன்படுகிறது. ஆங்கிலம் ஓர் உலகமொழி...எனவே ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்வததான் நல்லது; ஆங்கிலம் தொடர்ந்து கல்வி நிலையங்களில் இருக்கவேண்டும்!

"மத்திய சர்க்கார் இன்று ஆங்கிலத்தின்மூலம் மாநில சர்க்காருடன் தொடர்பு கொள்கிறது. எம்மொழி மூலம் ஆங்கில்த்தை நீக்கமுடியும்?...

...பொதுமொழிஒன்றின்மூலம் ஆங்கிலத்தை நீக்கிவிடலாமெனச் சிலர் கூறலாம்!...ஆனால் அத்தகைய பொது மொழி எங்கே உள்ளது? அந்த மொழி ஆங்கிலத்தை உடனே நீக்கமுடியுமா? நூற்றிஐம்பது ஆண்டுகளாக வேறூன்றிவிட்ட ஆங்கிலத்தை; இன்னும் வளர வேண்டிய நிலையில் உள்ள ஓர் மொழியின்மூலம் நீக்கிவிட்டால், இந்தியாவின் மொழிச் சிக்கல் தீர்ந்துவிடாது!...எல்லா விவகாரங்களையும் ஒழுங்கின்மையையும், குழப்பத்தையுந்தான் உண்டாக்கமுடியும்!"

(பாட்னா பல்கலைக்கழகப்பட்டமளிப்பு விழாவில், 1947-ம் ஆண்டு டிசம்பர் 21-ந்தேதி நிகழ்த்திய பேச்சின் சில பகுதிகள்)

"இந்தி தேசிய மொழியென ஒப்புக்கொள்ளப்பட்டாலும், அது கிழக்கே, மேற்கே, தெற்கேயுள்ள மக்களின் தாய்மொழியல்ல! இந்த மாநிலங்களெல்லாம் இந்தியைக் கற்காதவரையில், தேசிய மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாகக் கூறமுடியாது!...தேசிய மொழிப் பிரச்சினை ஒரு குறிப்பிட்ட பிரிவினரையோ குழுவினரையோ சார்ந்த பிரச்சினையல்ல! **'தேசியமொழிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொழி வடநாட்டு மொழியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதை நான் தற்செயலாக (accident) நிகழ்ந்த செயலாகக் கருதுகிறேன்! மற்ற வேறுபட்ட சூழ்நிலைகளிலே, தென்னகத்தின் மொழிதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்!"**

(I consider it an accident that the language which was chosen to be the national language, was from North India, under a different set of circumstances, it might have been a language of the South.)

என்று புது டெல்லியில் 1951-ம் ஆண்டு மார்ச் 15-ந் தேதி ஆசாத் பேசியுள்ளார்! **'வேறுபட்ட சூழ்நிலைகளிலே தென்னகத்தின் மொழிதான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும்!"** என்ற அவருடைய சொற்களுடன், **திரு. கிருஷ்ணசாமி பாரதி** என்ற மக்கள் சபை உறுப்பினர் அண்மையில் கூறியதை ஒப்பிட்டுப் பாருங்கள்!

"மக்கள் சபை உறுப்பினன் என்ற முறையில் இந்திய ஆட்சிச் சட்டத்தின்கீழ் கையொப்பமிட்டேன். ஆனால் எந்தச் சூழ்நிலையிலே காங்கிரசில் உள்ள உறுப்பினர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறதென்பதை மக்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், காரசாரமான விவாதத்திற்குப் பிறகு, மொழிப் பிரச்னை குறித்து வாக்குப் பதிவு நடந்தது. **இந்திக்கு ஆதரவாக எத்தனை வாக்குகள் கிடைத்ததோ அத்தனை வாக்குகளே அதற்கு எதிராகவும் கிடைத்தது!** கூட்டம் ஒத்திப்போடப்பட்டது! மறுபடியும் கூட்டம் கூடியது! மறுபடியும் அதே நிலை! கடைசியில் கட்சிக்கூட்டத்தின் தலைவர், தன்னுடைய வாக்கை இந்திக்குச் சாதகமாக வழங்கினார்!... கட்சிக் கட்டுப்பாட்டினால், இந்தியைப் பற்றிய சட்டத்தை நிறைவேற்ற நாங்கள் வாக்களித்தோம்!...ஆனால் இப்பொழுது சூழ்நிலை தளர்ந்திருக்கிறது; மாநிலங்களின் விருப்பத்திற்கேற்ப, ஆட்சிமொழிப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று ஒருவர் கூறுவதற்கேற்ற நிலையிலே அந்த சூழ்நிலை உள்ளது!" என்று அவர் கூறுகிறார்.

இதையேதான் ஆசாத் அவர்கள், "வேறுபட்ட சூழ்நிலைகளிலே தென்னகத்தின் மொழிதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்!" என்று கூறுகிறார்!

அதே புது டெல்லிக் கூட்டத்திலே ஆசாத் அவர்கள், "இந்தியாவின் ஆட்சிமுறையிலே கூறப்பட்ட பதினான்கு மொழிகளிலே தமிழும் ஒன்று!...தமிழ் வளம் பொருந்திய, பழமை வாய்ந்த இலக்கியத்தையும் பெற்றிருக்கிறது! அதனுடைய கவிதைகள், பிறமொழிகளிலே மொழி பெயர்க்கப்படவேண்டியதாகும்! பிறமொழிகளிலேமொழிபெயர்க்கத் தகுதி வாயந்ததுமாகும்!..." என்று பேசியுள்ளார்!

திரு. கே. எம். முன்ஷி:

"நமது நாட்டு நதியின் தரம் உயர்வாக இருப்பதும்—இருக்க வேண்டியதும்கூட ஆங்கிலோ-சாக்சானியச் சட்ட இலக்கியத்தைப் பொறுத்திருக்கிறது. உயர் நீதி மன்றங்களில் நீதிபதி தீர்ப்பு கூறும்பொழுது, ஆங்கிலத்தில் எவ்வளவு சிந்தனைப் பூர்வமாகவும், கருத்துக்கள் தெளிவாகவும் தீர்ப்பளிக்கிறாரோ, அந்த அளவுக்கு இந்தியில் தீர்ப்பு அளிக்கமுடியுமென்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை!

கேரள மந்திரி முண்டசேரி:

"முதல் மனிதப் பண்பாடு, முகவரி படைத்த மனித இனம், எல்லாம் திராவிட இனமேயாகும். ஆனால் இன்றைய இனத்தில் காண்கின்ற கண்மூடிக் கொள்கைகளும், சாதி வெறியும், கணக்கில்லாத கடவுட் தொகையும், அன்றைய திராவிட இனத்திலே கிடையாது!... காலத்தின் கொடுமையிலே, சோழத்தமிழிலே, பல்லவர்கள், தங்களது கைவலிமைக்கு ஆக்கம் தேடி வடமொழிக்குப் பாதை அமைத்துத் தந்ததுதான் இன்றைய ஆரியப் பண்பாட்டின் வெறியாட்டம் இங்கு காணப்படுவதற்குக் காரணம்!"

-இன்பபுரியான்.

மனோன்மணீயமும் நாடக அமைப்பும்!

இலக்கியம் வளம்பெற்ற எல்லா மொழிகளிலும் நாடகம் என்பது இலக்கியத்தில் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் மக்கள் வாழ்க்கையோடு நாடகம் பெரிதும் தொடர்பு கொண்டிருப்பதே ஆகும். இயல் – இசை - கூத்து என்ற மூன்று பிரிவைப் பெற்றிருந்த பண்டைக்காலத் தமிழிலக்கியத்தில் கூத்து என்பது நாடகம்போன்றதொரு பகுதியே. பாடலும், ஆடலும் கலந்த கூத்து, வரிக்கூத்து, மெய்க்கூத்து முதலிய பலவகைகளைப் பெற்றிருந்தது. கூத்து ஆடும்போது வரிப்பாட்டுக்கள் போன்றவை பாடப்படும். வள்ளுவர் காலத்திலும் கூத்தாட்டவைகள் இருந்தன. தொல்காப்பியர்.

'நாடக வழக்கினும்
உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற
புலனெறி வழக்கம்'

—என்ற அகத்திணையியற் சூத்திரத்தின்கண் 'நாடக வழக்கம்' என்று குறிப்பிடுவது கவனித்தற்குரியது. இத்தொடர் நாடகத்தைப் பற்றிய கருத்துக்கள் பண்டைத்தமிழரிடை இருந்தமையைப் புலப்படுத்துகின்றது. வடமொழிக்கண் நாடகங்கள் இருப்பதுபோல் தமிழில் முற்காலத்தில் நாடகங்கள் எழுதப்படாமை ஒரு குறையே. சிலப்பதிகார காலத்திற்கு முன்பே நாடக நூல்கள் இருந்தன என்பார் சான்றுக நூல்களின் பெயர்களை மட்டும் கூறுகின்றனர். அதனால் அவற்றின் உண்மை உருவங்கள் புலப்படவில்லை. அகநானூறு, கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை முதலிய அகப்பாட்டுத் தொகை நூல்களில் வரும் பாடல்கள் யாவும் நாடக உரையாடல்கள்போல் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு நாடகக் காட்சியைத் தருவதாக இருக்கிறது.

சுந்தரம் (பிள்ளை) அவர்களின் முயற்சி: தமிழிலக்கிய வரலாற்றில் நாடக வளர்ச்சியைப் பற்றியோ படிக்கவேண்டிய நிலை இல்லாது போனமைக்குக் காரணம் எல்லோருக்கும் தெரிந்ததே. என்றாலும் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்துப் பேராசிரியராயிருந்த சுந்தரம்(பிள்ளை) அவர்களின் ''மனோன்மணியம்'' நவீன நாடகமாகத் திகழ்கின்றது. இது தமிழில் தற்போதுள்ள நாடகங்களில் தலை சிறந்து விளங்குகின்றது. மனோன்மணியத்தின் கவிதையழகுகளைக் கருதாமல் அதை நாடகமாகக் கருதும் இக்கட்டான நிலையை தமிழகம் உணர்கிறது.

மனோன்மணியம் - நாடகம்: நாடகங்கள் குறிப்பாக நடிக்கப்படுவதற்காகவே எழுதப்படுகின்றன. சுந்தரம்(பிள்ளை) அவர்களின் நாடகமோ படிக்கப்படுவதற்காகவே சிறப்பாக இயற்றப்பட்டிருக்கிறது. எனினும் முதன் முதலில் சிறந்த தமிழ் நாடக நூலை இயற்றிய 'பிள்ளை' அவர்களின் முயற்சிக்கு நன்றி கூறாமல் இருக்க முடியாது. மனோன்மணிய நாடகநூல் முழுதும் இலக்கிய வளஞ்செறிந்த இன்பக்கவிதை நடையில் எழுதப்பட்டிருக்கிறது. வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கும் பண்பு, பாத்திரங்களின் வாயிலாகவே நூல் முழுவதும் பேசப்படும் இயல்பு, அங்கம், களம் இவற்றின் காரணமாகவே மனோன்மணீயம் ஒரு நாடகமாகக் கருதப்படுகிறதேயொழிய அது நடிப்பதற்கு உதவுவதால் நாடகமாகக் கருதப்படுவதில்லை. எனினும் மனோன்மணீயத்தை எளிய உரைநடையில் எழுதி நாடகப்போக்கில் சில மாறுபாடுகளைச் செய்துவிட்டால் அது நடிப்பதற்குச் சிறந்த நாடகமாகிவிடும். இப்போதிருக்கும்படி பார்த்தால் இது ஒரு காப்பிய நாடகமாக இருக்கிறது. அதாவது காப்பியப் பண்புகளையும், நாடகப் பண்புகளையும் ஒருங்கே பெற்றிருக்கிறது. இது காப்பியம் போல பாட்டால் (அகவற்பாவால்) இயன்று, நாடு- மலை - திங்கள் - கதிரவன் - ஆறு- நிலம் முதலியவற்றின் வருணனைகளுடன் நீண்ட விளக்கங்களைப் பெற்றிருக்கிறது. நாடகம்போலக் கதைப்போக்கு, பாத்திரங்களின் பண்புநலன், காட்சிநிலை (Spectacle), இசை முதலியனவற்றைப் பெற்றிருக்கிறது. சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்றவை நாடகக் காப்பியங்கள் என்று கருதப்படுகின்றன. ஆனால் மனோன்மணீயம்போன்ற காப்பிய நாடகம் 19-ம் நூற்றாண்டிற்குமுன் எழுதப்பட்டிலது. கல்வெட்டுக்களிலிருந்து அறியப்படும் இராஜராஜசோழன் நாடகம் (ஆண்டுதோறும் தஞ்சைப் பெருங் கோயிலில் விழாக் காலங்களில் நடிக்கப்பட்டு வந்த ஒரு நாடகம்) எந்த உருவத்திலிருந்தது என்பது அறியக்கூடவில்லை. ஒருவேளை அது வடமொழியைப் பின்பற்றி அமைக்கப்பட்டு இருந்திருக்கலாம். மனோன்மணீய ஆசிரியர் தமிழ், ஆங்கிலம், வடமொழி என்ற மூன்று மொழிகளிலுமமைந்த நாடக வழக்கங்களையும், நாடகங்களையும் நன்காராய்ந்து அவற்றை இன்ப ஒற்றுமை உண்டாகும்படி மனோன்மணீயத்தில் அமைத்துள்ளார். அவை எவ்வளவுதூரம் வெற்றி தந்தது என்பதுபற்றிய கவலையில்லை. அப்படிச் செய்த அவர் முயற்சி பாராட்டுதற்குரியதே. ஆங்கில மரபைப் பெரிதும் பின்பற்றி எழுதிய திரு. டி. இலக்குமணபிள்ளையின் வீலநாடகம்; இரவிவர்மன், சத்தியவதி என்ற நாடகங்களைக் காட்டிலும், வடமொழி மரபைப் பெரிதும் பின்பற்றி எழுதிய பரிதிமாற் கலைஞனின் ரூபாவதி, மானவிஜயம் போன்ற நாடகங்களைக் காட்டிலும் பல்லாற்றானும் சிறந்து நிற்பது மனோன்மணீயமே. எனவே இது தற்காலத் தமிழ் நாடக எழுத்தாளர்கட்கு ஓரளவு வழிகாட்டியாக அமைந்து நிற்கிறது.

மனோன்மணீயம் என்னும் தமிழ்நாட்டுப் பசும் பொன்னை மேனாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட திறனாய்வு என்னும் உரைகல்லில் உறைத்துப் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் தமிழில் நாடக இலக்கணம் பற்றிய சிறந்த நூல் ஒன்றும் இல்லை. பரிதிமாற் கலைஞனின் நாடக இலக்கண நூல் வேறு யாராலும் பின்பற்ற முடியாத நிலையில் இருக்கிறது. பெரும்பாலும் வடநாட்டுக் கதைதானென்று மதிக்கப்படும் இராமாயணத்தைத் தமிழிற் செய்து புகழ் பெற்ற கம்பனைப் போல் - மேனாட்டில் லார்டு லிட்டன் என்பாரின் 'மறைவழி' என்றழைக்கப்படும் 'மிலேடஸின் இழந்த கதைகள்'' என்ற நாவலைப் பெரிதும் பின்பற்றி அமைக்கப்பட்டது இந் நாடகம். வடமொழிக் கதையைக் கூறுவதில் தமிழ் மரபு பிறழாது காத்த தமிழ்ப்பெருங் காதலரான பெருங்கவி கம்பரைப் போல், மேனாட்டுக் கதையைத் தமிழ் நாட்டுக் கதையாகச் செய்த சுந்தரம் (பிள்ளை) அவர்கள் புகழுக்குரியவரானார்கள். துன்பியல் நாடகமாகவே முடித்திருக்க முடியும் என்றாலும், தமிழ் மக்கள் என்றும் விரும்பாத துன்பியல் முடிவைத் தவிர்த்து இன்பியல் நாடகம் போல இதை முடித்துள்ளார் ஆசிரியர்.

நாடகத் திறனாய்வு: மேனாட்டு இலக்கியத்திறனாய்வாளர்களும், நாடகத்திறனாய்வாளர்களும் அரிஸ்டாட்டிலையே வழிகாட்டியாக வைத்திருந்தனர். அரிஸ்டாட்டில் கூறிய விதிகளுக்கு மாறாக எழுதப்பட்ட உலகப் பெருங் கவிஞர் நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களைக் கூட அவர்கள் குறை கூறினர். ஷேக்ஸ்பியர் சென்ற அடிவழியைப் பின்பற்றியே பிள்ளை அவர்களின் நாடகம் செல்வதால் அரிஸ்டாட்டிலின் விதிகளை ஒப்பிட்டுப்பார்க்க நினைக்கும் எனது கருத்து யாதெனில் மனோன்மணீயத்தின் நாடக இயல்புகளை ஒருவாறு அறிந்துகொள்ளுவது தான். 'தி பொயடிக்ஸ்' என்ற நூலில் அரிஸ்டாட்டில் துன்பியல் நாடகம், காப்பியம், செய்யுள் முதலியவற்றிய திறனாய்வுகளைப் பற்றிக் கூறியுள்ளார். துன்பியல் நாடகம் பற்றிக் கூறும்போது அவர் அது ஆறு பகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார், அவையாவன:

I. கதை அமைப்பு (Plot)
II. பண்பு நலன் (Character)
III. சிந்தனை (Thought)
IV. காட்சி நிலை (Spectacle)
V. இசை (Music)
VI. சொல்லாட்சி (Diction).

இவ்வாறனுள் சிந்தனை - காட்சி நிலை - சொல்லாட்சி என்ற மூன்றையும் நடிப்பதற்காக எழுதப்படாத மனோன்மணீயத்திற்கு வற்புறுத்த வேண்டியதில்லை. மீதி மூன்றையும் பற்றியே கருதுவோம். முதலாவது.

கதை அமைப்பு: இது துன்பியல் நாடகத்தின் உயர்நிலை. கதையமைப்பற்ற துன்பியல் நாடகம் உயிரற்ற உடல்போன்றது. மனோன்மணீயத்தில் நல்ல கதை அமைப்பு உண்டு. ஆசிரியர் எழுதியுள்ள முகவுரையில் இதையறியலாம். கதை அமைப்பு எளிமையானது, சிக்கலானது என இருவகைப்படும். இவற்றில் சிக்கலின்றி நேரே செல்லும்

— 10ம் பக்கம் —

கலைவளர் மன்ற நிதி நிகழ்ச்சி

சென்னை 29-வது வட்ட கலைவளர் மன்ற இரவுப்பள்ளி, நூல் நிலைய வளர்ச்சிக்காக, 18-5-58 ஞாயிறு காலை 10 மணிக்கு பாரகன் திரையரங்கில் திரு. அ. பொ. அரசு M. C. அவர்கள் தலைமையில் ஜுபிடர் 'ராணி' திரையிடப்பட்டு மிகச் சிறப்பாக நடந்தேறியது. திரு. என். வி. என். சோமு, கோ. இறைமுடிமணி ஆகியோரும் முறையே சிறப்புரையாற்றினர். முடிவில் மன்ற வளர்ச்சிக்காக பெரும் அளவில் நிதி தந்து உதவிய அனைவருக்கும் திரு. தஞ்சை நா. ல. பதி அவர்கள் திரைப்பட பொறுப்பாளர் சார்பில் நன்றி உரை கூறினர்.

குஞ்சரத்தின் கதை

தென்னரசு

14

அல்லிவேலு உள்ளே நுழைந்தான். அவன் உடம்பெல்லாம் சவுக்கடியின் தழும்புகள் பின்னிக் கிடந்தன.

"அல்லி, இதென்ன சவுக்கடி? ஐயோ, உடம்பெல்லாம் சிவந்திருக்கிறதே! அட பாவி!"

"சவுக்கடியா இது! வினயம் தெரியாதவர்களுக்கு எதிர்பாராமல் கிடைக்கும் பரிசுகள்!"

"புரியச் சொல் அல்லி! திருடர் கள்வழிமறித்துக்கொண்டார்களா?"

"இல்லை! கதையைக் கேட்டால் கண்ணீர் வடிப்பீர்கள். நிச்சயமாகப் பெருமூச்சுவிடுவீர்கள். மனைவி மக்களைப் பார்க்க சூரைக்குடி போயிருந்தேனல்லவா! அங்கே போனதும் சிங்கப்பெருமாள் அம்பலகாரரைப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது. போனேன். அம்பலகாரர் ஆரம்பத்தில் கோபமாகவே பேசினார். பைத்தியக்காரர்! இன்னும் மான்கொம்பு இறந்துவிட்டதாகவே அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார். போகட்டும்! குஞ்சரத்தைப்பற்றிக் கேட்டார். பிரான்மலையில் கோயிலில் இருப்பதாகச் சொன்னேன். உடனே என் பின்னால் பதினைந்து முரடர்களை அனுப்பி வைத்தார். நான் பிரான்மலைக்குப் போனேன். கோயில் முழுதும் தேடினேன். அகப்படவில்லை. அந்தக் குகை காலியாகக் கிடந்தது. என்னோடு வந்த முரடர்கள் நான் சொன்னதை நம்பவில்லை. மறுபடியும் அம்பலகாரரிடம் என்னை அழைத்துக்கொண்டு போனார்கள். அம்பலகாரர் வெறி கொண்டுவிட்டார். கட்டி வைக்கச் சொன்னார். தென்னைமரத்தில் என்னைக் கட்டி வைத்தார்கள். ஒருவன் புளிய விளாறினால் அடித்தான். சுருண்டு போனேன். அம்பலகாரர் என்னிடம் வாக்குறுதி கேட்டார். முடிந்தவரை தேடிப்பார்த்துகுஞ்சரத்தைகொண்டு வந்து சேர்ப்பிக்கிறேன் என்றேன். அவர் ஒப்புக்கொள்ளவில்லை. பெரிய மனிதர்கள், மிராசுதார்கள் கையாளுகின்ற முறையை அம்பலகாரர் கையாண்டார். இரண்டாயிர ரூபாய் நான் அவரிடம் ரொக்கமாகப் பெற்றுக்கொண்டதாக என்னிடம் ஒரு முறிச்சீட்டு எழுதி வாங்கிக்கொண்டார். அடி தாங்கமுடியாமல் நானும் கையெழுத்துப் போட்டுவிட்டேன். குறைந்தது, இன்னும் மூன்று மாதங்களுக்குள் குஞ்சரத்தை ஒப்படைக்காவிட்டால் என் மனைவி மக்களை நடுத் தெருவுக்குத் தள்ளி விட்டு வீடு-வாசலையெல்லாம் பறி முதல் செய்துவிடுவார் அம்பலகாரர்"

—அல்லி இந்தச் சம்பவத்தைச் சொல்லும்போது அவன் கண்கள் சிவந்து தண்ணீரில் அமிழ்த்தி எடுத்த அரளிப் பூவைப்போல் இருந்தன.

எதிரே நின்ற கண்ணம்மா சமையற் கட்டில், அடுப்புக்குப் பக்கத்தில் நெடுநேரம் நின்றவளைப் போல் வியர்த்துக் களைத்துப் போனாள்.

"உட்காரு அல்லி, ஒத்திடம் கொடுக்கட்டுமா?"

"எல்லாம் உன்னுடைய பஞ்சவர்ணத்தினால்தானே! அவர் அந்தக் குஞ்சரத்தை பிரான்மலைக் கோயிலிலேயே வைத்திருந்தால் இந்தத் தொந்தரவெல்லாம் ஏன் வரப் போகிறது. அந்த முரடர்களிடம் குஞ்சரத்தைக் காட்டியிருப்பேன். கலகம் ஓய்ந்திருக்கும். மான்கொம்புத் தேவரும் உன்னை இங்கே ஏன் அடைத்து வைக்கப் போகிறார். உன்னை உன் ஊரிலே கொண்டு போய் விட்டிருப்பார். மறந்து போய்ட்டேனே! உன் ஊர் சிறுகூடல்பட்டிதானே!"

—இப்போது முகப்புக் கதவை யாரோ தட்டினார்கள். கண்ணம்மா அறைக்குள் போய் தலைவார உட்கார்ந்தாள். அல்லி கதவைத் திறந்தான். நாற்பதுக்கு மேற்பட்ட ஒரு அம்மையார்-தலை, அறையும் குறையுமாகநரைத்திருந்தது. வாழ்க்கையின் சுகதுக்கங்களை யெல்லாம் அனுபவித்துக் கரைகண்டதின் தெளிவு அந்த அம்மையாரின் முகத்தில் புதையுண்டு இருந்தது. கழுத்திலே தாலியில்லை-விதவை!

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? யாரைப் பார்க்க வேண்டும்?" அல்லி கேட்டான்.

"ஜமீன்தார் அய்யாவைப் பார்க்க வேண்டும். எனக்குஊரு கிழக்கிட்டு! ஒரு முக்கியமான சமாசாரமா வந்திருக்கிறேன். நீங்க யாரு?"-அந்த அம்மையார் பணிவோடு சொன்னார்கள்.

"நான் ஜமீன்தாரிடம்தான் வேலை பார்க்கிறேன். சமாச்சாரத்தைச் சொன்னால் அவரிடம் தெரிவிக்கிறேன்"

"ஒங்களை நம்புறேன். இந்த ஓலையை எசமான் கிட்டே கொடுத்திட்டாபோதும்! வாசலிலேகாத்திருக்கேன்; பதில் கேட்டு வாங்க. நான் சிறுகூடப்பட்டி!" என்றாள் கிழவி.

அல்லி விழித்துக் கொண்டான். கையைத் துடைத்துவிட்டு ஓலைவாங்கிக்கொண்டு உள்ளே வந்தான். கண்ணம்மாவுக்குத் தெரியாமல் கதவின் மறைவிலிருந்து ஓலையைப் படித்தான். யாருக்கும் தெரியாமல் இளையாத்தங்குடி ஜமீன்தார் முடித்து வைத்தாரே ஒரு அடைக்கலக்கதை, அந்தக் கதை அந்த ஓலையில் அடங்கியிருந்தது.

"உயர்திரு இளையாத்தக்குடி எசமான் அவர்களுக்கு, சிறுகூடல்பட்டி அய்யாக்கண்ணு தாழ்மையுடன் எழுதிக்கொண்ட கடிதம். இவடம் க்ஷேமம். தங்கள் க்ஷேமமறிய ஆவலுடையவனாக இருக்கிறேன்.

குஞ்சரம் மிகுந்த சுகத்தோடு இருக்கிறது. நாங்கள் அதை எங்களுடைய சொந்தப் பெண்ணைப் போல் பாதுகாத்து வருகிறோம். எங்களால் எந்தவிதமான தொல்லையும் குஞ்சரத்திற்கு இல்லை.

எசமான் அவர்களிடம் நெடு நாட்களாக ஒரு விஷயத்தைச் சொல்ல எண்ணிக்கொண்டிருந்தேன். வெளியிலே சொன்னால் கேவலம் என்று நான் வெட்கப்பட்டேன். ஆனால் இன்றைய நிலை, அதை வெளியில் சொல்லித்தான் ஆக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்து விட்டது. எனக்கு ஒரு மகள் இருந்தாள் என்று நான் தங்களிடம் ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். குஞ்சரத்தை தாங்கள் என் இல்லத்திற்கு அழைத்து வந்த போதுகூட, என் மகள் என் இல்லத்தில் இருப்பதாகவே தங்களிடத்தில் கூறினேன். மன்னிக்க வேண்டும். அது முற்றிலும் பொய். என் மகள் இரண்டு மாதங்களுக்குமுன் காணமற் போய்விட்டாள். மிகக் கேவலமான செய்தியை மனம் விட்டு தங்களிடத்தில் தெரிவிக்கிறேன். இந்தத் தகவல், இதுவரை யாருக்கும் தெரியாது. அடுத்த வீட்டுக்காரர்களுக்குக்கூடத் தெரியாது. தெரிந்திருந்தால் என்னை உயிரோடு பார்த்திருக்கமுடியுமா? ஊரில் உள்ளவர்கள் எல்லாம், நான் என் மகளை பத்திரமாகவும், அன்பாகவும் வளர்ப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள் குளிக்கக்கூட குளத்திற்கு அனுப்பாமல், சுவாமி தரிசனத்திற்குக்கூடக் கோயிலுக்கனுப்பாமல் நான் என் மகளை வளர்க்கிறேனாம்! என்நெஞ்சு எரிகிறது. என் அருமைச் செல்வியைப் பார்த்து அறுபது தினங்களுக்கு மேலாகிவிட்டது.

பத்து நாட்களுக்குமுன்பு அடுத்த ஊர்க்காரர்கள் பெண் பார்க்க வந்தார்கள். எனக்கு குபீர் என்றது. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தேன். பெண்ணையே காட்டாமல், வந்தவர்களைப் போகச்சொல்லி விடலாம் என்று நினைத்தேன். முடியவில்லை. வந்தவர்கள், என் மகளைப் பற்றி ஊரில் விசாரித்து, உத்தமி, பத்தினி என்று முடிவுகட்டி திருமணத்திற்கு நாளும் குறித்துவிட்டுப் போய் விட்டார்கள். ஊமையன் கனவு கண்டதைப்போல் விழித்துக்கொண்டிருக்கிறேன். அடுத்த வாரம் கல்யாணம்! ஆமாம் அடுத்த வாரம்! பெண் எங்கே? எனக்கே தெரியவில்லை. பெண்ணைத் தேடும் போது, நான் என் உயிரைத் தேடுவதாகவே உணர்கிறேன்; வீட்டிலே குஞ்சரம் நடப்பது, பாடுவது, பேசுவது, வேலை பார்ப்பது எல்லாம் எனக்கு என் மகளின் நினைவையே இழுத்து வருகின்றன.

எசமான் எனக்கொரு உதவி செய்ய வேண்டும். என் மானம் காப்பாற்றப்

- 10ம் பக்கம் -

198384
சென்னை-600 008

- 25 -

அத்திப்பழம்

மா.கி.தசரதன், எம்.ஏ.

மலைவையாவூரிலிருந்து பன்னிரண்டு வண்டிகள் முதல்நாள் காலை 4 மணிக்கே புறப்பட்டன. வண்டிகள் என்றால் வில்வண்டிகளோ பெட்டிவண்டிகளோ அல்ல. சதாரண நாட்களில் எரு ஏற்றிச்செல்ல, மூட்டை சுமந்துசெல்ல, வைக்கோல் திணித்துச் செல்லப் பயன்படும் 'கட்டை'வண்டிகள்தான். கிராமங்களில் யாருடைய வீட்டிலாவது ஏதாவது என்றால் எல்லோரும் சேர்ந்து செய்கின்ற முறை இன்னும் அழியாமல் இருக்கின்றது. வீடு கட்டினாலும் ஆளுக்கு ஒரு வண்டி மண் அடிப்பார்கள். திருமணம் என்றால் கேட்கவே வேண்டியதில்லை. என்ன வேலை எப்படி இருந்தாலும் இரண்டு நாட்களுக்கு அதையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு அவரவர் பங்குக்கு ஏதாவது ஒன்று செய்வர். அந்தப் பன்னிரண்டு வண்டிகளும் அப்படிக்கட்டப்பெற்றவைதான். ...வீட்டுப் பெண்ணின் திருமணம் என்றால் கேட்கவேண்டுமா? அதிலும் வர இருக்கின்ற மாப்பிள்ளை பட்டணத்தில் கல்லூரியில் படிக்கின்றவன். அதனால் வழக்கத்திற்கும் மேலாக அதிக அக்கறையும் சுறுசுறுப்பும் கொண்டு கட்டைவண்டிகளை மேலே இரண்டு ஓலை போட்டு மூடி கூண்டுவண்டிகளாக்கினர்.

மணப்பெண்ணுக்கு மட்டும் 'சவாரி' போட்ட வண்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதிலே அவளுடைய அத்தையும் சிற்றன்னையும் துணைக்கு ஏறிக்கொண்டனர். காலாகாலமாக...வீட்டில் 'படி'ஆள் வேலை செய்யும் முனியன் தலையில் பெரிய முண்டாசு கட்டிக்கொண்டு நீளமான சாட்டை ஒன்றை கையில் எடுத்துக்கொண்டு ஏர்க்கால் பக்கத்தில் வந்துநின்றான். மாடுகளின் மூக்கணாங்கயிற்றை ஒற்றைக்கையில் சேர்த்து இழுத்துக்கொண்டு நின்றான். மாடுகள் அவனுடைய ஆற்றலுக்கு அடங்கக்கூடாது என்று நினைத்தவை போல தலையை முன்னே முன்னே இழுத்தன. அப்படி இழுத்தபோதெல்லாம் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் கணகணவென ஒலித்தன.

முன்னே நான்கு வண்டிகள் போனபின் மணப்பெண்ணின் வண்டியை விட்டனர். பின்னே மற்ற வண்டிகள் தொடர்ந்தன. வண்டிகளுக்குள்ளே இருந்து சின்னஞ்சிறு குழந்தைகளின் சிணுக்கு ஒலியும் பெரியவர்களின் பேரொலியும் கலந்துவந்தன. வண்டிக்காரர்கள் எல்லாம் புதிய ஊக்கத்தோடு மாடுகளை ஏவல் செய்தனர். பத்துப் பதினைந்து பெரியவர்களும் நான்கைந்து வாலிபர்களும் வண்டிகளின் பக்கங்களிலும் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு இரண்டு கைகளையும் வீசி நடந்தனர்.

பொழுது விடிகின்ற நேரத்தில் பாலாற்றங்கரைக்கு வந்துசேர்ந்தனர். கொஞ்சம் சிரமப்பட்டு வண்டிகளைக் கரையேற்றினர். மறுபடியும் முன்போல் பயணம் தொடர்ந்து நடந்தது.

காலை 9 மணிக்குச் செங்கற்பட்டைத் தாண்டி சிங்கப்பெருமாள் கோயில் வந்து சேர்ந்தனர். சந்தைமேட்டில் வண்டிகளையெல்லாம் அவிழ்த்து விட்டனர். அவிழ்த்த மூட்டையிலிருந்து பொருள்கள் கீழே சிதறுவதைப் போல வண்டியிலிருந்து மக்கள் இறங்கினர். கூண்டுவண்டிக்குள்ளே கூனிக்குறுகிக்கிடந்த சோர்வும் அலுப்பும் நீங்க கையையும் காலையும் நீட்டி நெட்டிமுறித்தனர். இரண்டொருவர் கட்டுச்சோற்றுப்பானைகளை எடுத்துச்சென்று அருகிருந்த குளத்தங்கரையில் வைத்தனர், வெல்லத்தைச் சுற்றி எறும்புக்கூட்டம் போல் அதைச் சுற்றிப் பசித்தவர்கள் கூடினர். முன்னமே தயாராக எடுத்துவைத்த கட்டைப் பிரித்து ஆளுக்கு ஒரு தாமரை இலையைக் கொடுத்தனர். கட்டி கட்டியாக மோர்கலந்த சோற்றை எடுத்துவைத்து மாங்காய் ஊறுகாயையும் உடன் வைத்தனர். சற்றுநேரத்தில் பானை காலியாயிற்று. குளத்து நீரை இரண்டு கைகளாலும், அள்ளி அள்ளிக் குடித்துவிட்டு 'ஏப்' என்று சில பேர் ஏப்பமும் விட்டனர்.

சற்றுப் பொறுத்து மறுபடியும் பயணம் தொடங்கியது,

வழியில் இருந்த ஊர்களைக் கடந்து பகல் 2 மணிக்கே வண்டிகள் மாத்தூர் எல்லையை எட்டிவிட்டன. ஆனால் அவர்கள் உடனே ஊர்க்குள் செல்லவேண்டாம் என்று அங்கேயே ஒரு பழைய கோயிலின் மதிளுக்குள்ளே தங்கினர். ஏன்எனில் மணப்பெண் ஊர்வலம் மாலை 6 மணிக்குமேல்தான் தொடங்குவதாக இருந்தது. இருட்டினால் தானே வானமும் மத்தாப்பும் விடமுடியும். 'காஸ்'விளக்கு எடுக்கமுடியும்?

இரண்டு பெரிய கூடைகளில் சிற்றுண்டியும் ஒரு தவலை நிறைய காப்பியும் அனுப்பியிருந்தார் பெரியசாமி. ஒரு கூடை நிறைய மலரும் மாலையும் வந்து சேர்ந்தது. மணமகன் வீட்டுப் பெண்கள் நான்கைந்து பேர் வந்து 'என்ன வேண்டும்' என்று அடிக்கடி கேட்ட வண்ணம் இருந்தனர்.

ஊரின் மற்றோர் பக்கம் ஞானசம்பந்தனின் வீட்டு நிகழ்ச்சிகளையும் காண்போம்.

தெருவை அடைத்துப்போட்ட பந்தலில் ஒப்பனை வேலைகள் சிறப்பாகச் செய்திருந்தார்கள். பந்தலின் கால் ஒவ்வொன்றிலும் அசோகந்தழையை வைத்துக் கட்டியிருந்தனர். பனைஓலைத் தோரணங்கள் இடை இடையே இருந்தன. முகப்பில் இரண்டு வாழைமரங்கள் தாரோடு நின்றன. வேறு ஒரு புறத்தில் உணவுக்கான ஏற்பாடுகள் முடிந்திருந்தன. இரண்டு மூன்று பேராக உறவினர்கள் கூடி இருந்து காலாகாலமாகச்சொல்லி வரும் நைந்துபோன கேலிப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தோடு நமக்கென்ன தொடர்பு என்பதுபோல தெருக்கோடியில் இருந்த பள்ளிக்கூடத்துக் கட்டடத்தில் இரண்டு குழுவினர் ஏஸ் பெரியதா-எதிரியின் ஜாக்கி பெரியதா என்று சண்டை போட்டுக்கொண்டிருந்தனர்.

அங்கும் இங்குமாக அலைந்து பெரியசாமி கட்டளைகளை இடுவதும், இட்ட கட்டளைகளை மாற்றுவதுமாக இருந்தார்.

அந்த நேரத்தில் ஒரு ஆள் மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்க ஓடிவந்து பெரியசாமியின் கையைப் பிடித்து "இப்படி வா'ங்கள் இப்படி வா'ங்கள்" என்று இழுத்துக்கொண்டு போனான்.

"என்ன" என்று கேட்டவாறு ஆவலே உருவாக அவரும் அவனைத் தொடர்ந்தார். இரண்டு நிமிடங்கள்கூட இராது அவன் சொன்ன சேதி, அதைக் கேட்டு அவர் பதை பதைத்தார். அவருடைய கையும் காலும் வெடவெட என நடுங்கின. முகம் களை இழந்தது. கூனிக் குறுகிப் போனார். ஏதும் அறியாமல் சமையல் பகுதிக்கு ஓடினார். அங்கே "எல்லாம் இதுபோதும் ஐயயரே" என்று சமையல்காரரிடம் பேரம் பேசிக்கொண்டு நின்றார் மணிவண்ணன். அவரிடத்திலே பெரியசாமி ஏதோ காதில் குசுகுசுவெனப் பேசினார். அய்யரோடு போட்ட சண்டையை அப்படியே பாதியில் விட்டுவிட்டு மணிவண்ணன் ஓட்டமும் நடையுமாக தாவித்தாவி மாடிப்படி ஏறினார். அங்கே அந்த அறையில் ஞானசம்பந்தனும் எழிலனும் இன்னும் இரண்டொருவரும் மட்டுமே இருந்தனர்.

மணிவண்ணன் வந்ததைக் கண்டதும் எழிலன் மட்டும் எழுந்துவந்து 'என்ன மாப்பிள்ளை வரலாமோ' என்று கேட்டான்.

"மாப்பிள்ளை இருக்கட்டும் நீ மட்டும் வா" என்று அவனை மாடியின் வேறு மூலைக்கு இழுத்துச்சென்றார். இரண்டு விநாடிகளில் அவன் திரும்பி வந்து ஞானசம்பந்தனை இழுத்துச் சென்றான்.

சற்றுநேரத்தில் எல்லோரும் கீழே ஒரு அறையில் கூடினர்.

"என்ன ஞானசம்பந்தா தெரியுமா?" என்றான் எழிலன்.

"எது?" என்றான் அவன்.

"அவர்கள் வேறு வந்திருக்கின்றார்களாமே"

"யார்"

"சரி. இன்னும் மூடிவைக்கின்றாயா. இதுதானே உன்னிடம்"

"நான் ஒன்றையும் மூடியும் வைக்கவில்லை; மறைத்தும் வைக்கவில்லை"

"நீ வைத்தாலும் அவர்கள் விடுவதாக இல்லை. எனக்கு அப்போதே தெரியும்" என்று பெரியசாமி ஏதோ சொல்லத் தொடங்கினார்.

இதற்குள் மணிவண்ணன் எழுந்துவந்து அவரைத் தனியே அழைத்துச்சென்று "ஆனது ஆகிவிட்டது. இனி ஆத்திரப்பட்டு என்ன செய்வது. முள்ளின்மேல் போட்ட துணி மெதுவாகத்தான் எடுக்கவேண்டும்" என்றார்.

"நீங்கள் இப்படித்தான்" என்று இழுத்தார் பெரியசாமி.

"சரி. நீங்கள் போ'ங்கள் நான் பார்த்துக்கொள்ளுகின்றேன்" என்று அவரை அங்கே விட்டு விட்டு மணிவண்ணன் மட்டும் உள்ளே வந்தார்.

ஞானசம்பந்தனிடம் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் எடுத்துச்சொன்னார். நடந்தது இதுதான். மலைவையாவூரினர் வந்து தங்கி சிற்றுண்டி அருந்தி பூவும் பொன்னும் பூண்டுபொலிவோடு இருந்தனர். மேளக்காரர் வந்து 'பீ...பீ' என்று ஊதி குழலைச் சரி பார்த்துக்கொண்டிருந்தனர். காஸ்விளக்குகள் ஆறோ ஏழோ ஒவ்வொன்றும் ஒரு ஆளின் தலைமீது ஏறிவந்திருந்தன! ஆயிற்று இதோ இன்னும் சற்றுநேரத்தில் ஊர்வலம் தொடங்க வேண்டியதுதான். அந்த நேரத்தில் 'பாம் பாம்' என்று அலறிக்கொண்டே ஒரு கார் வேகமாக வந்து நின்றது. ஒருவேளை ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்த வண்டியோ என அங்கிருந்தவர்கள் எண்ணினர்.

நின்ற வண்டியிலிருந்து மணப்பெண்போல் ஒப்பனை செய்யப்பெற்ற ஒருத்தி இறங்கினாள். ஆனால் அவள் இடுப்பில்சின்னக் குழந்தை ஒன்று தூங்கிக்கொண்டிருந்தது. துணைக்கு வேறு பெண்கள் யாரும் காணோம். ஆனால் இரண்டு ஆண்கள் மட்டும் இருந்தனர். அவர்களிலே ஒருவன் அங்கே இருந்த ஒருவனிடம் "இதுதானே மாத்தூர்?" என்று கேட்டான்.

"ஆமாம். ஏன்?" என்றான் அவன்.

"வா சொல்கிறேன்" என்று அவனைச் சற்று அப்பால் அழைத்துச்சென்று 'இன்று இங்கு மாப்பிள்ளையாக உட்கார்ந்திருக்கின்றானே ஞானசம்பந்தன் அவன் மனைவிதான் இவள். கையில் இருப்பது அவன் குழந்தைதான்.' என்றான்.

அதைக் கேட்டவன் மலைவையாவூர் ஆள் அல்ல; மாத்தூரான்.

அதனுல்தான் அவன் உடனே அந்தச் செய்தியை அங்கேயே போட்டு உடைக்காமல் ஓடி வந்து பெரியசாமியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் காதில் ஓதினுன்.

இந்த விவரங்களைக் கேட்டதும் எழிலனுக்கும் ஞானசம்பந்தனுக்கும் என்ன செய்வது என்று விளங்கவில்லை. முடிவில் அவர்களை நேரில் சந்தித்துப் பேசலாம் என்று தீர்மானித்தனர்.

உடனே ஞானசம்பந்தன், எழிலன், மணிவண்ணன் ஆகியவர்கள்மட்டும் கோயிலுக்குச் சென்று அவர்களைத் தனியே அழைத்துப் போயினர்.

இதற்குள் மணமகள் வீட்டாரிடையே ஒரு சல சலப்பு எழுந்தது. 'யார் அவர்கள்? ஒரு பெண் வந்திருக்கிறதே! 'அட ஒரு குழந்தைகூட இருக்கிறது' என்று இப்படிப்பேச்சு எழுந்தது.

ஊர்வலம் தொடங்கவில்லை. இரண்டொருவர் பெரியசாமியிடம் வந்து 'என்ன?' என்று கேட்டனர். ஒன்றும் இல்லை' என்ருர் அவர்.

மணப்பெண்ணின் தந்தை வந்தார். 'ஒன்றும் இல்லை' என்ருர் அவருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை.

இதற்குள் மணிவண்ணன் திரும்பி வந்து ஊர்வலத்தைத் தொடங்குவதுதானே' என்று ஊக்கினுர்.

பெரியசாமி ஒன்றும் புரியாமல் விழித்தார். மணமகள் வீட்டார் மகிழ்ச்சியில்லாமல் இருந்தனர்.

எப்படியோ ஒரு வழியாக ஊர்வலத்தைத் தொடங்கச் செய்துவிட்டு மணிவண்ணன் திரும்பி வந்தார்.

அருணுசலமும் வேலுவும் தனியே சென்று என்னவோ பேசினர். எழிலனும் ஞானசம்பந்தனும் தலையைத் தாழ்த்தித் தரையையே பார்த்துக்கொண்டு சோர்ந்து உட்கார்ந்திருந்தனர்.

அமுதவல்லி காரின் ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடந்தாள். அவள் கையில் இருந்த குழந்தை அவ்வப்போது அழுதது. அது அழுதபோதெல்லாம் அதை அடக்கிவிட்டுத்தான் தேம்பிக்கொண்டிருந்தாள் அமுதவல்லி.

வேலுதான் பேசினுன்.'என்ன அய்யா முடிவு செய்தீர்கள் என்ருன்.

"நீங்கள்தானே முடிவு செய்ய வேண்டும்?" என்ருர் மணிவண்ணன்.

"நாங்கள்தான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோமே"

"என்ன அது?"

"அவளையும் குழந்தையையும் இங்கே விட்டுப் போவது"

"இப்படிச் சொன்னுல் என்ன செய்வது?"

"பின் எப்படிச் சொல்ல வேண்டும் சொல்லுங்கள் சொல்கிருேம்"" என்றனர் இருவரும்.

வழிக்கு வருகின்றனர் என்பதை மணிவண்ணன் விளங்கிக் கொண்டார்.

"அழைத்துக்கொண்டு போங்கள்" என்ருர்.

"அது எப்படிமுடியும்? எவ்வளவு செலவு. இந்தக் காலத்திலே ஒரு குடும்பம் என்ருல் சும்மாவா?" என்ருர்கள்.

"அதை நாங்கள் பார்த்துக் கொள்ளமாட்டோமா சும்மாவா போகச் சொல்லுவோம்"

"அப்படிப் பொதுவாகச் சொல்லிவிட்டால் போதுமா. எங்களுக்குத் தெரியவேண்டாமா?" என்றனர்.

"நீங்கள்தான் கேளுங்களேன்"

"அது நன்ருக இராது"

"பரவாயில்லை கேளுங்கள் என்ருர் மணிவண்ணன்.

"சரி மாதத்திற்கு ஒரு நானூறு கொடுங்கள்" என்ருன் வேலு.

"இது என்ன ஜமீனு?" என்ருர் மணிவண்ணன்.

"என்னமோ நாங்கள் கேட்டோம். நீங்கள் சொன்னுல் தானே. இப்படிக் கோபப்பட்டால் இரண்டு பேருக்குமே தொல்லைதானே" என்ருன் அருணுசலம்.

இவர் சொல்ல, அவர்கள் கேட்க, கடைசியாக திங்களுக்கு நூற்றியைம்பது ரூபாய் தருவது என்றும் அமுதவல்லியையும் குழந்தையையும் அருணுசலம் பார்த்துக்கொள்ளுவது என்றும் முடிவாயிற்று. கையில் கொஞ்சம் தொகையைக் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டுத்தான் மூவரும் திரும்பினர் வீட்டுக்கு.

இவர்கள் பேச்சு நடக்கின்றபோது ஞானசம்பந்தன் இரண்டொரு முறை எழுந்தான். எழிலன் அவனைப் பிடித்து இழுத்து அதெல்லாம் இனி வேண்டாம் என்று தடுத்துவிட்டான்.

போகின்றபோது அமுதவல்லி காருக்கு வெளியே தலையை நீட்டிப் பார்த்தாள். ஞானசம்பந்தன் இரண்டடி முன்னுல் போனுன். எழிலனின் கரம் அவனை இழுத்தது.

அமுதவல்லியின் விம்மல் ஒலி தெளிவாகக் கேட்டது; ஞானசம்பந்தன் கண்களில் இரண்டு துளி கண்ணீர் தோன்றியது.

அந்த விம்மல் ஒலியை அருணுசலமும் அடக்கவில்லை; இந்தக் கண்ணீரை எழிலனும் துடைக்கவில்லை.

★

கூத்து ஆடி முடிந்தபின் அவைக்களத்தில் யார் இருப்பார்கள்? வந்து சேருகின்றபோது ஒவ்வொருவராக வருவார்கள். ஆனுல் போகின்றபோது எல்லோரும் ஒன்ருகப் போய்விடுவார்கள்.

திருமண வீடும் அப்படித்தான். இரண்டுநாள் முன்னதாக, ஒரு நாள் முன்னதாக, சடங்கிற்கு, சாப்பாட்டிற்கு என்று ஒவ்வொருவராக வருவார்கள். பின் ஒரே வேளையில் எல்லோரும் போய்விடுவார்கள் வீடு வெறிச்சென்று கிடக்கும்.

புயல் அடித்து ஓய்ந்தபின் இங்கும் அங்கும் பொருள்கள் சிதறிக்கிடப்பதைப்போலத் திருமணம் ஆனபின் பொருள்கள் சிந்திக்கிடப்பது இயற்கை.

ஆடியின் அலுப்பு தோன்றுவதைப் போல திருமணம் முடிந்தபின் அந்த வீட்டில் ஒரு வெறுமை இருக்கிறது. அத்தகைய வெறுமைக்கிடையில் சிவகாமியம்மாளும் பெரியசாமியும் ஓய்வாக ஒருநாள் வெண்ணிலவின் ஒளியில் மாடியில் பேசிக்கொண்டிருந்தனர்.

"இப்போதுதான் எனக்கு ஒரு வழியாய் மனதுநிம்மதியாயிற்று" என்ருள் சிவகாமி அம்மாள்.

"இப்போதுதான் எனக்கு நிம்மதி போயிற்று" என்ருர் பெரியசாமி.

"நீங்கள் எப்போதும் இப்படித்தானே - எதற்கும் எதிர்வாதம் பேசிக்கொண்டு"

"எதிர்வாதம் என்ன கண்டாய் நீ உன் மகன் செய்த திமிர் வேலை உனக்கென்னதெரியும்?"

"எங்கோ கிடக்கின்ருன், அவன் பேச்சை ஏன் எடுக்கின்றீர்கள்?"

"உனக்கு அவன் செய்தது எங்கே தெரியப் போகின்றது?"

"என்ன செய்துவிட்டான் அப்படி?"

"என்ன செய்துவிட்டான் என்று கேட்கிருய்? இந்த வயதில் இவனுக்கு வைப்பு இருக்கிறது சிவகாமி வைப்பு இருக்கிறது" இதைக் கேட்டதும் சிவகாமி அம்மாள் சிலையாகிவிட்டார்கள். பேச முயன்ருர்கள் முடியவில்லை. சற்று நேரமானதும் "யாரோ கதை கட்டியிருப்பார்கள்" என்ருர் அந்த அம்மா. அவர்களுடைய கண்கள் கலங்கியிருந்தன. சேலைத் தலைப்பால் கண்களின் ஓரங்களைத் துடைத்துக்கொண்டார்.

பெரியசாமிக்கும் கண் கலங்கியது. என்ருலும் அந்த அழுகையை மென்று விழுங்கினுர்.

"நானே பார்த்தேனே" என்ருர்.

சிவகாமியம்மாள் ஒன்றும் சொல்லவில்லை. பெரியசாமியும் ஒன்றும் பேசவில்லை.

நெடு நேரம் கழித்து உணர்ச்சிகள் எல்லாம் அடங்கியபின் பெரியசாமி எல்லாக் கதையையும் சொன்னுர். அதைக் கேட்டபின் சிவகாமியம்மாளுக்குச் சோர்வுமிகுந்தது. சிந்தை கலங்கியது. மகன் 'குழந்தை'யாக இருக்கின்ருன் என்று எண்ணியிருந்த அந்தத் தாயின் காதுகளில் ஒலித்தது எத்துணைக் கொடுமை என்ருலும் என்ன செய்வது? தாயின் தியாகங்களில் எல்லாம் தன் மகவின் குற்றங்களை மறக்கின்ருளே அதுதான் பெரிய தியாகம். மறந்து அன்பு மடை திறக்கின்ருளே அதுதான் ஈடுஇணையற்றஅருஞ்செயல்.

தாயின் மனதில்மட்டும்அந்தத் தனிக் கருணையில்லாமல் போனுல், உலகத்தில் கொடுமைகள் மலியும்; தீமைகள் தழைக்கும். எப்பிழையும் பொறுத்திட்டு என்றும் வற்ருத அன்பு பொழியும் 'தாய்மை' சிவகாமியம்மாளின் மனத்திலும் ஆழ வேர் விட்டிருந்தது. அதனுல்தான் பேரிடி வீழ்ந்தபோதும் அந்த இடியின் பிடியில் சிக்கிச் சீரழிந்து போகாமல் நிலைக்க முடிந்தது.

அந்தத் 'தாய்மை' உணர்ச்சி இருந்ததினுல்தான் அங்கே மலைவையாவூரில் ஓர் இல்லத்தின் அறையில் வாழ்க்கையின் முதல் படியில் காலை வைத்த ஒருபெண் துணிவோடு துயரத்தைத் தாங்கிக்கொள்ள முடிந்தது.

'சிரித்துச் சிரித்து வயிறு நோகின்றது' என்று சொல்ல வேண்டிய அந்தப் பெண் அழுது அழுது கண்கள் சிவந்து, தலை கனத்துக்கிடந்தாள்.

முதல் இரவுக்காக ஒப்பனை செய்திருந்த அறையோ, அறையில் நானே அனைத்தும் என அடைத்துக்கிடந்த கட்டிலோ, அதன்மீது கிடந்து எழிலும் மணமும் பரப்பிக்கொண்டிருந்த மலர்களோ, ஒரு மூலையில் இனிப்பும் துவர்ப்பும் காரமும் கைப்பும் கலந்து இருந்த உணவின் வகையிலோ, அவளுடைய மனம் ஈடுபடவில்லை.

இதனையெல்லாம் காண வேண்டும் எனப் பலநாள் எண்ணி ஏங்கியவள் தான் அவள். அவள் தோழிமார் பலர் அதை அன்றுகூட நினைவுபடுத்திக் கலகலவென நகைத்துக் கொண்டேதான் போயினர். ஆனுல் அந்தப் பேதைப்பெண்ணின் நெஞ்சத்தில் நீங்காத கவலை ஒன்று நிலைத்த இடம் பெற்றுவிட்டது. சரசரவென ஒலித்த புதிய ஆடையுடன் உள்ளே வந்த ஞானசம்பந்தன் கதவைத் தாளிட்டான். கட்டிலின் ஓரத்தில் அவள் எழுந்து நின்ருள். அவள் கண்களில் நீரும் எழுந்தது.

தொடரும்

★
எங்கும் கிடைக்கும்.

நீ, அழு தாயே, அழு!

அய்யகோ அம்மா! கனவிலும் கருதவில்லையே நான், எழுத்துலகத்திற்கு வந்து இத்தனை சிறிய காலத்திற்குள் நான் கண்ணீர் வடிப்பேனென்று...அன்று முதன் முறையாக என் கருத்துக்களைக் காகிதத்தில் சமைத்துக் கொட்டியபோது, கிஞ்சித்தும் நினைக்கவில்லையே இன்று இரத்தத்தைத் தோய்த்து எழுதப் போகிறேன் என்று!

எத்தர்கள், ஏமாற்று வித்தைக்காரர்கள், சத்தெடுத்துவிட்டு சக்கையை பாதையோரம் துப்பிவிட்டுச் செல்லும் சழக்கர்கள் இவர்களெல்லாம் நடை போடுகிருர்கள் இந்த எழுத்துலகத்திலே, காளான்கள் போல என்று தெரிந்தும் உள்ளே காலெடுத்து வைத்தேனே, இவ்வளவு சீக்கிரம் அவர்கள் என் மகிழ்ச்சியை சூறையாடிவிடுவார்கள்; கசாப்பு கடைக்காரன்போல என் இதயத்தைக் கொத்திக் குவித்துவிடுவார்கள் என்றுதெரியாதே!...என்ன?... என்ன? என்று துடிக்கிருயா?... கேள்...உன் மகன் ஏமாற்றப்பட்டு விட்டான்! எதிர்க்கமுடியாத ஏழை என்ற காரணத்தால்!

இதோ என் கண்களிலிருந்து வடிவது உப்பு நீரல்லம்மா...உதிரம் செந்நீர்! ஆம் தாயே! இதயம் வெடித்துப் புலம்புபவன் விழிகளிலிருந்து வேறு எதை எதிர்பார்க்கமுடியும் உன்னுல்? காரணம்? அதைச் சொல்லத்தானம்மா உன்னிடம் ஓடோடி வந்திருக்கிறேன். என் நெஞ்சத்துப் பாரத்தை கொஞ்சத்தில் கொட்டிவிடமுடியாதம்மா...... விளக்கமாகவே கூறுகிறேன் என் வேதனைக் கதையை செவிமடுத்துவிட்டு என்ன சொல்லப் போகிருயோ ஆறுதலாக எனக்கு...தெரியாது!

★

எழுத வேண்டும், எழுத வேண்டும் என்ற ஆசை வெள்ளம் என் உள்ளத்திலே அணை போடமுடியாத அளவுக்கு பீரிட்டுப் பாயும்பொழுதுதான் ஒரு ஆசிரியர் எனக்காதரவு அளிக்க முன் வந்தார். தற்செயலாக ஏற்பட்ட சந்திப்பின்போது என் எழுத்தார்வத்தைக் கண்டு, இளம் எழுத்தாளர்களை-ஆழ்கடலில் அனுதையாகக் கிடக்கும் அம்முத்துக்களை-உலகத்தின் கண்கள் முன்னே எடுத்துரைத்து நல்ல விலைக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கொள்கை பூண்ட அவர், "எழுது தம்பீ! உன் எண்ணங்கள் அத்தனையும் எழுது! என் ஏடு இடம் தரும்" என்று ஊக்கமளித்தார்.

என் முதல் கதை அவரது ஏட்டிலே வெளி வரப் போகிறது என்பதை அறிந்த என் உள்ளம் காற்றில் பட்ட இலவம்பஞ்சுபோல், ஓடும் ஆற்றில் விழுந்த ஓலைச் சருகுபோல் எங்கெங்கோ சுற்றியலைந்தது. சிங்காரப் பண்பாடியது...... செந்தூரமாகக் கமழப் போகிருேம் என்று என் சிந்தை களிப்புற்றது. கதை வெளிவரும் நாளை, கவளம் சோறு கொண்டுவரும் இல்லத்தரசியை ஆவல் பொங்கும் கண்களோடு எதிர்பார்க்கும் ஓர் பிச்சைக்காரனைப்போல் எதிர்நோக்கினேன்.

பத்திரிகை வெளிவந்த அன்று ஆவலோடு பக்கங்களைப் புரட்டினேன். அதோ என் கதையின் தலைப்பு!...அதன் கீழே என் பெயர்! ஆகா! கதைக்கேற்ற ஓவியம்!... அப்பப்பா!...பொம்மை கண்ட சிறு பிள்ளையானேன்!....கூத்தாடினேன், கும்மாளமிட்டேன். ஆகா! என் எழுத்துக்களும் அச்சுவாகனம் ஏறி விட்டன...இனி நானும் ஓர் எழுத்தாளன்..பேரறிஞன் ஷாவின் கூற்றுப்படி இனி என் எழுத்தைத்தவிர வேறு யாருக்கு நான் பயப்படவேண்டும்? எழுமையும் ஏமாப்பு பெற்ற நான் இனி ஏறுபோல் பீடுநடை போடுவேன் என்ற எல்லையிலா மகிழ்ச்சியோடு என் நண்பர்களிடமெல்லாம் எடுத்துச்சென்று காட்டினேன். "குலை ஈன்றபின் சரியும் வாழையாயில்லாமல், விழுது ஈன்று வளர்ந்து விரியும் ஆலமரமாக இரு; ஆவின்பால்போல் மணம் பெறு!" என்று வாழ்த்தினர் அவர்களும்.

அப்பொழுதெல்லாம் தெரியாதே என்னை மகிழ்வித்த அக்கதை ஒரு நாள் மனக்கசப்பை உண்டாக்கும், சோகக்கடலில் என்னை ஆழ்த்தும் என்று; ஆம் தாயே! 'எரிமலை' என்ற என் கதை உண்மையிலேயே என் நெஞ்சத்தை குமுறும் எரிமலையாக்கும் காலம் நெருங்கியது.

ஒருநாள்...நாடகம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோதுதான் நடந்துவிட்ட விபரீதத்தை உணர்ந்தேன்...ஆம் அம்மா! சமூகக் கதையாக நான் தீட்டியிருந்ததை சிறிது மாற்றி சரித்திர நாடகமாக்கியிருந்தார். அந்தக் கதாசிரியர்!...பச்சையாக சொல்ல வேண்டுமென்ருல் திருடியிருந்தார்!...ஒவ்வொரு காட்சிக்கும் கையொலி எழும்பும்போதெல்லாம் என் குருதிவெள்ளம் கொதித்தது. நாடகம் முடிந்து செல்வோரெல்லாம், கதைக்கும், கதாசிரியருக்கும் புகழ்மாலை சூட்டிச்சென்றனர். என்ன செய்வேன் நான்?

அய்யோ! உடலைக் கெடுத்து, உயிரைக் கொடுத்து, உருவாக்கிய என் ஓவியத்தை தோலிருக்கச் சுளை விழுங்குதல்போல, எடுத்து ஏப்பமிட்டுவிட்டாரே. பகலிரவெனப் பாராது, பசுங்குருதி சோரப் பாடுபட்டு, பக்குவப்படுத்திய என் கற்பனைக் காவியத்தைச் சொல்லாமல், கொள்ளாமல், மெல்லாமல், சமைக்காமல் சொந்தமாக்கிக் கொண்டாரே யாரிடம் சொல்லுவேன்......என்னவென்று சொல்லுவேன்?

அந்தக் கதாசிரியர் நாட்டிலே ஓரளவுக்கு அறிமுகமானவர்தான். நல்ல பல கதைகள் எழுதும் திறன்படைத்தவர் என்ற செல்வாக்கு பெற்றவர்தான்.. ஒருவேளை...இந்த மாதிரித் தொழில் செய்துதான், அகப்படாமல் 'சுகஜீவனம்' நடத்திருரோ என்று எண்ணிக் குமுறியபடியே என் கதையை வெளியிட்ட ஆசிரியரிடம் ஓடினேன், வஞ்சிக்கப்பட்டுவிட்ட விபரத்தை எடுத்துக்கூற. எப்படியும் எனக்கு நியாயம் கிடைக்குமென்று எதிர்பார்த்தேன்

என் உள்ளத்தில் எழுந்தஎண்ணக் குமுறலைக் கேட்டு என் ஆசிரியர் சிரித்தார். 'தம்பீ! இதெல்லாம் இந்த நீள்வையகத்திலே சகஜம். உரிமை பெற்ற உலகோவியங்களையே கூசாமல் தன்னுடையது என்று ஓங்கி அடிப்பவர்கள் மத்தியில் உரிமை பெருத உன் கதை என்னப்பா செய்யமுடியும்?...உன் ஆசையையும் கெடுப்பானேன்; அவரைக் கண்டு பேசலாம்' என்று கூறிஞர்.

ஆனுல் சந்தித்து அளவளாவிய பிறகுதான் தெரிந்தது திருடனிலும் எவ்வளவு நெஞ்சழுத்தத் திருடன் அவர் என்று! "வெளியாகும் அத்தனைக் கதைகளையும் படிப்பது சிரமம். அவைகளைப் படித்துவிட்டுத்தான் புதியதோர் கதை கற்பனை செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடும், எல்லைக்கோடும் அவசியமற்றவை மட்டுமல்ல அர்த்தமற்றவையிங்கூட. ஒரு கதையின் சாயல் மற்ருென்றில் இருந்தால் அதை ஒரு சந்தர்ப்பக் கோளாறு, இலக்கிய விபத்து என்றுதான் கொள்ள வேண்டுமேயன்றி, இரவலாகவோ, இருட்டடிப்பாகவோ அல்ல" என்று கூறி ஒரேயடியாக அது தன் சொந்தக் கற்பனைதான் என்றும், யாரையும் மூலக் கதைக்குச் சொந்தமானவர் என்று அங்கீகரிக்கமுடியாது என்று முகத்திலறைந்தாற்போல் சொல்லி விட்டார்.

என்ன செய்வேன் நான்? என்னைக் கைதூக்கிவிட்ட ஆசிரியரிடம்இதைப் பற்றி அவர் பத்திரிகையில் வெளியிட்டு கண்டனம் தெரிவிக்குமாறு கூறினேன். ஆனுல் அவரோ பிரபலமடைந்த அவ்வாசிரியருக்கும் தனக்கும் பிளவு ஏற்படக்கூடாது என்று கருதி என்னைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார்.

எப்படித்தாயே என்னுல் சமாதானமடையமுடியும்! நான் என்ன சகலத்தையும் துறந்துவிட்ட சன்யாசியா? ஒரு சாமான்யன். உதயமாகும் எழுத்தாளன் நான். உதிக்கும் பொழுதே கருமேகங்கள் என்னைச் சூழ்ந்துகொண்டால் எப்படிப் பொறுமாமல், பொங்காமல், புளுங்காமல், பெருமூச்சு விடாமல் இருக்க முடியும்?

ஆழிசூழ் உலகினைப் பெறுவதாயினும், நாழி ஒன்றேனும் பொய்பேசி பழியேற்கமாட்டேன் என்ற கருத்துபட 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய்கூறுவல்' என்று பாடிய மருதனிள நாகனுரையும் 'ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும், மூத்தோன் வருக என்னுது, அவருள் அறிவுடையோனுறு அரசுஞ் செல்லும்' என்று பாடிய ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனையும் பெற்ற நீயாயம்மா, இக்கொடுஞ்செயலர்களையும் பெற்றிருக்கிருய்?

"பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதமை ஞாலத்து அறம் பொருள் கண்டார் கண்இல்" என்ற பொன்மொழியை மறந்த அவரை, "திறனல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று" என்று எப்படியம்மா என்னுல் பொறுத்துக்கொள்ளமுடியும்? "களவினுல் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவதுபோலக் கெடும்" என்ற [illegible] வில்லையே என்னுல்! இன்ன செய்தாரை ஒறுக்கும் பண்பை எளியவனுன என்னிடத்தில் எதிர்பார்க்கிருயா அம்மா?

"என்ன செய்வது, யார் வேண்டுமானுலும், எதை வேண்டுமானுலும் கொஞ்சம் கூட்டியும் குறைத்தும் எழுதித் தம்முடையது என்று சொல்லிக்கொள்ளலாம்.....போகட்டும்..... எப்படியாவது அழகு, கலைவடிவமாக உலகத்தில் பரவினுல் போதும்" என்று பெருந்தன்மையாக 'கரித்துண்'டால் எழுதிக் காட்டுகிருரே பேராசிரியர், அந்த உயர் பண்பு இந்தச் சிறுவனுக்கு வரவில்லையே! சாமர்செட் மாம் தனது 'மூன் அண்டு சிக்ஸ் பென்சு' என்ற கதைக்கு முன்னுரை எழுது முகத்தான் மனமுவந்து மன்னித்துவிடுகிருரே தன் பொன்னுேவியத்தைக் களவாடி, கோணல் வழி சென்ற ஒரு குறுமதியாளனை! அப்படிப்பட்ட விரிந்தமனம் எனக்கு வரமாட்டேன் என்கிறதே! ஒருவேளை புகழின் உச்சியில் இருந்தால் இதையெல்லாம் ஒரு சிறு புன்னகைமூலம் உதறித்தள்ள முடியுமோ?

"குழந்தையைப் பறிகொடுத்தாலும் அதை ஈன்றெடுத்தவள் நான்தானே" என்று சமாதானமடைய முடியவில்லையே என்னுல்! குழந்தையைத் தத்துக் கொடுத்தவள் கூட, அது வர்ண ஆடைகளிலே சொர்ணப் பிம்பமாக சொகுசாக வேருெரிடத்தில் செல்லமாக வளர்வதைப் பார்த்து வேதனையால் சுருண்டு போவாளே! 'அழகுக் கொலுவே, அமுதக்கலையே, அற்

அ. ராஜா, எம். ஏ. எம். எஸ்ஸி

புதச் சிலையே' என்றெல்லாம் மாற்றுர் புகழும்போது அது தன் பிள்ளையென்று ஒருவன் நெஞ்சாரக் கூறிக்கொண்டு பெருமிதம் அடைந்தால் சொந்தத்தாய் எப்படிக் குலுங்கி அழுவாள்? அதே நிலையில்தானம்மா நானுமிருக்கிறேன், பேசமுடியாத ஊமையாக, ஆசாபாசங்களை அடக்கிக்கொள்ள வேண்டிய ஆண்மையற்றவனக!

இந்த நிலைக்கு மாற்று மருந்தே கிடையாதா? இதைப்போல் மற்றவரிடம் தன் கைப்பொருளை இழந்துவிட்டு கண்ணீர் வடிக்கும் இளங்கலைஞர்கள் நான் மாத்திரம்தானு இந்தத் தமிழகத்தில்...இல்லையம்மா ...இல்லை...பத்தோடு ஒன்று பதினென்று, அத்தோடு ஒன்று நான் உண்டு!

இதோ பார் தாயே! திருடப்பட்ட என் எழுத்தோவியம் காவியமாக உருவெடுக்கிறதாம்—விளம்பரம் வெளி வந்திருக்கிறது!... அய்யோ! இரத்தக் கண்ணீர் வடிக்கும் என் நேத்திரங்களை மூடி வைக்க முடியவில்லையே...அணு அணுவாக அவதிப்படும் என்னை ஒரேயடியாக எடுத்தணைத்துக்கொள்ளமாட்டாயா? ...இது நாள்வரை என் வாழ்க்கையிலே ஒருமுறைதானே நான் அழுதேன்!...என் நெற்றித் திலகமாக வைத்து காதலித்த கட்டழகி ஒருத் [illegible] வன் ஒருவனுக்கு திருமணம் செய்து வைத்துவிட்ட பிறகு, 'அத்தான்! என் இதயத்திலே சித்திரமாகவும் சிற்பமாகவும் பத்திரமாக இருக்கும் தங்களை எடுத்தெரிய எவருக்கும் திறன் இல்லை; திறமை இல்லை...வருகிறேன் அண்ணு!' என்று அத்தான் முறைபாடி, அண்ணு நிலைநாடி அவள் பிரிந்தபோதுதான் அழுதேன்...அப்பொழுது என் இதயம் திருடப்பட்டது...இப்பொழுது என் இலக்கியம் திருடப்பட்டுவிட்டது. அப்பொழுதும் எதிர்க்க முடியவில்லை; வாழ்வின் இளம் பருவம் என்ற காரணத்தால்... இப்பொழுதும் எதிர்க்க முடியவில்லை; அறிமுகத்தில் இளம்பருவம்...அப்பொழுதும் அழுதேன்; இப்பொழுதும் அழுகின்றேன்...இனி எப்பொழுதும் இதை நினைத்து நினைத்து அழத்தான் வேண்டுமாமம்மா?

'எரிமலை' என்ற தலைப்பை மாற்றிவிட்டு, 'பூகம்பம்' என்று ஆக்கிவிட்டாராம். இலக்கிய விபத்துதான்என்று கூறி தன் கள்ளத்தனத்தையும், கயவாளித்தன்மையையும்மூடிமறைத்து, கையும் களவுமாக பிடிபடும்மட்டும் இன்பபுரிவாசியாக இருக்கும் அந்த இலக்கிய மேதை!! எரிமலை, பூகம்பம்-இரண்டிற்குமே பூமியின் அடித்தளத்தில் ஏற்படும் கோளாறுதானே காரணம்...அதேபோலத்தான் எங்களிருவர் கதைகளுக்கும் அடிப்படைக்கரு...இது உனக்குத் தெரிகிறது. எனக்குத் தெரியும். ஊரிலுள்ள ஒருசில நண்பர்க்குத் தெரியும். ஆனல் இந்த இலக்கியக்கள்வனை உலகம் தெரிந்துகொள்ளாதே!

வெளிவந்த 'எரிமலையை'யும், வெளிவரப்போகும் 'பூகம்பத்தையும் மாறி மாறிப் பார்க்கிறேன். எரிமலையும், பூகம்பமும் என் உள்ளத்தில்தான். வேறு எங்குமே இல்லை. என்ன சொல்கிருய் அம்மா?....அய்யோ! நீயுமா அழுகின்ருய்?...அழுவதைத் தவிர என்னால் என்ன செய்யமுடியும் [illegible] ...அழு, தாயே, அழு!...நம்மைத் தேற்றுவார். நம் உளப்புண்ணை ஆற்றுவார், இதற்கு மாற்று ஒன்று தேடித் தருவார் யாருமேயில்லை. எனவே அழு. மேகத்தால் இருண்டுபோன வானத்தைப்போல, சோகத்தால் சுருண்டுபோன நம் இதயமும் அழுகையிலாவது அமைதி காணட்டும். எனவே அழுதாயே, அழு! ★

★ ★ ★

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

மனேன்மணீயக் கதை எளிமையான கதையமைப்புடையதாக இருக்கிறது. அடுத்தது—

பண்பு நலன்: நாடகப் பாத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் தனிப்பட்ட பண்புகள் இருக்க வேண்டும். இந்நாடகத்தில் சீவகன், குடிலன், சுந்தரமுனிவர், நாராயணன், நடராசன், புருடோத்தமன், மனேன்மணீ, வாணிபோன்ற முக்கியமான பாத்திரங்களுக்கும்; சகடர், நிஷ்டாபரர், கருணைகரர், பலதேவன், அருள்வரதன், முருகன் முதலிய சிறிய பாத்திரங்களுக்கும் தனித்தனிப் பண்புகளை ஆசிரியர் கொடுத்துள்ளார். இதற்காக ஆசிரியர் அரும்பாடு பட்டிருக்கிருர். ஆனல பெரும் நாடகாசிரியரான ஷேக்ஸ்பியருக்கும், நம் சுந்தரம்(பிள்ளை)க்கும் பாத்திரப் பண்புகளை வரைவதில் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. அதே நேரத்தில் பல ஒற்றுமைகளும் உள்ளன. காட்டாகச் சுந்தரம்(பிள்ளை), பாத்திரப் பண்புகளை வரிசையாக அடுக்கிப் பாத்திரங்களின் மூலமும், தனி மொழிகளின் மூலமும் சொல்லிவிடுகிறார். நாடகம் பார்ப்போரே,படிப்போரே உய்த்துணர்ந்து கொள்ளு மாறு செய்துவிடுவதே இயல்பான முறை. அப்படிச் செய்ய (பிள்ளை) அவர்களுக்கு முடியாமற்போகவில்லை. ஆனல் நாடகத் திறனைவே அறியாத தமிழ்மக்களுக்குப் புரியும்படிக்காகவே அவ்வாறுசெய்துள்ளார். காப்பிய நாடகமாக இன்றித் தனி நாடகமாக எழுதி இருந்தால் நிச்சயம் அவர் அம்முறையைத் தவிர்த்திருப்பார். இரண்டாம் அங்கம்-முதற்களத்தில் நாராயணன் மூக்கில் கரி தேய்த்து வரல், முதலங்கத்தில் மனேன்மணி தோழிகளுடன் விளையாடல், நான்காம் களத்தில் மனேன்மணி காமநோய்ப்பட்டு இருத்தல், அதே களத்தில் சேவகர்கள் தோன்றுதல், ஐந்தாம் களத்தில் போர் நிகழ்தல் முதலியன சிறந்த நாடகக் காட்சிகளாக அமைந்துள்ளன. நாடகம் படிப்போர் இவற்றை அகக்கண்ணுல் பார்த்து மகிழும்படி ஆசிரியர் செய்துள்ளார்.

— அரிமழம், கதிரவன்

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

படவேண்டுமானல் நீங்கள் அந்த உதவியைச் செய்துதான் தீரவேண்டும். வேறு வழி எனக்குக் கிடைக்கவில்லை. தாலிகட்டும் வரைக்கும் மணமேடையில் உட்கார்ந்து என் மானத்தைக் காக்க-என் உயிரைக் காக்க-என் குடும்பத்தைக் காக்க ஒரு பெண் தேவை! பெண் அழகாக இருக்கவேண்டும் என்பதல்ல! ஒரு பெண் வேண்டும். அந்தப் பெண் குஞ்சரத்தின் சாயலில் இருந்தால் போதும்! இது நடக்காதஒன்று, நடைபெறமுடியாத ஒன்று என்பதை நான் உணர்கிறேன். ஆனல் நடந்துதான் ஆகவேண்டி யிருக்கிறது. இல்லாவிட்டால் நான் செத்தாக வேண்டும்; என் குடும்பம் அழிந்தாக வேண்டும். கெஞ்சிக் கேட்கிறேன், மண்டியிட்டு கேட்கிறேன். தங்களால் இயலாதது ஒன்றும் இல்லை. இருபதாண்டு காலமாக விசுவாசத்துடன் உழைக்கும் என் வீட்டுப் பண்ணைக்காரியை அனுப்பி வைத்திருக்கிறேன். அவள் நல்லவள், நம்பிக்கையானவள். அவளிடம் தகவலைச் சொல்லியனுப்புங்கள். என் வீட்டில் திருமண ஏற்பாடுகள் நடைபெறுவதாகவே ஊரில் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆனல் நான் இதுவரை எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை. எதைச் செய்வது? யாருக்காகச் செய்வது? தூரிகை இருக்கிறது; வண்ணம் இருக்கிறது, [illegible] இருக்கிறது சுவர் வேண்டாமா?

கனவானே, கருணை மிகுந்தவர்களே, மானத்திற்காக இறைஞ்சுகின்றேன், செய்யுங்கள்! கிழவியை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம்
அய்யாக்கண்ணு
சிறுகூடல்பட்டி.

—கடிதத்தைப் படித்த அல்லிக்கு, தலையில் தாங்கமுடியாத எடையுள்ள பனிக் கட்டியைத் தூக்கி வைத்தது போலிருந்தது. எதிரே இருந்த அறையைப்பார்த்தாள்.கண்ணம்மாபொட்டு வைத்துக்கொண்டிருந்தாள். அந்தக் கடிதத்திலிருந்து, அல்லி இரண்டு உண்மைகளைத் தெரிந்துகொண்டாள். கண்ணம்மாவின் தந்தைக்கும், ஜமீன்தாருக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது என்பதையும், ஜமீன்தார் குஞ்சரத்தைப் பிரான்மலைக் குகையிலிருந்து யாருக்கும் தெரியாமல் கிளப்பிக்கொண்டுபோய் சிறுகூடல் பட்டியில் கண்ணம்மாளின் தந்தை யாரிடத்தில் ஒப்படைத்திருப்பதையும் அந்த ஓலை வெளிப்படையாக நிரூபித்தது. அல்லி துடித்தாள். முதலில் கண்ணம்மாவிடம் இந்தத் தகவலைத் தெரிவிப்பதா அல்லது உடனே சூரைக்குடி போய் சிங்கப்பெருமாள் அம்பலகாரரிடம்தகவலைத் தெரிவிப்பதா என்று அவள் திணறினுள். அப்போது உள்ளே இருந்து யாரோ வரும் சத்தம் கேட்டது. ஓலையைச் சுருட்டி கையிலே வைத்துக்கொண்டாள். தூக்கக் கலக்கம் நீங்காமல் தலைவிரிகோலமாக உள்ளே இருந்து வந்தான் மான்கொம்பு. அவன் கண்கள் சிவந்திருந்தன.

"அல்லி!"

"என்னங்க!"

"ஊர் நிலவரம் எப்படி இருக்கிறது?"

"புரியவில்லை; எங்கும் அமைதியாக இருக்கிறது. அம்பலகாரர் துரும்பாக இளைத்திருக்கிருர்!"

"நீ அவரைப் பார்க்கவில்லையா?"

"பார்த்தேன்!"

"பேசவில்லை?"

"பேசினேனே!"

"என்ன சொல்கிருர்?"

"அவருடைய அடக்கமான பேச்சு பயங்கரமாகத் தானிருக்கிறது"

"சரி, கையிலிருக்கும் ஓலையைக் கொடு!"

"ஓலையா? இது...?"

"தெரியும் எனக்கு? தெரிந்துதான் மாடியிலிருந்து வருகிறேன். வெளியிலே இருந்த கிழவியைக் கூப்பிடு! அவள் யார்? அல்லி, என்னிடமா விளையாடுகிருய்? தெரியுமலவா என்னை?"

"என்னங்க இப்படிச் சொல்றீங்க! எனக்கு ஒன்றுமே தெரியாதே! ஓலை வந்தது. யாருக்கு என்றேன். ஜமீன்தாருக்கு என்ருள் கிழவி. கொடுக்கலாமென்று வாங்கி வைத்திருக்கிறேன். அவ்வளவுதானுங்க!"

"டேய்! என்ன என்னையே ஏய்க்கப் பார்க்கிருய்? :மேலே என்ன இருக்கிறது பார்த்தாயா?"

"ஜன்னல் இருக்குதுங்க!"

"அங்கே நின்றுபார்த்தால் இங்கே நடந்தது தெரியுமா தெரியாதா?"

—மான்கொம்பு மறைபொருளாகப் பேசியதை அல்லி புரிந்துகொண்டான். அவன் ஓலையைப் படித்ததை மான்கொம்பு பார்த்துக்கொண்டு தானிருந்திருக்கிருன் என்பதை அறிந்துகொண்ட அல்லி, நடுங்கிக் கொண்டே ஓலையை மான்கொம்பு விடம் கொடுத்தாள். முடிவுக்கு வந்த கதை, புது முறுக்குப்பெறப் போவதை எண்ணி அல்லியின் உடல் கலகலத்து போனது.

மான்கொம்பு ஓலையைப் படித்தான். இராவணனைப்போல் கொதித்தான். வாலியைப்போல் கர்ஜித்தான்.

"குஞ்சரம் சிறுகூடல்பட்டியில் இருக்கிருளா? பொன்னழகரே! இவ்வளவு சீக்கிரத்தில் என்னைப் புரிந்துகொள்ளப் போகிறீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை!" என்று தானே சொல்லிக்கொண்டார்.

"என்ன! என்ன! குஞ்சரம் சிறுகூடல்பட்டியிலேயா இருக்கிருள்? யார் வீட்டில் இருக்கிருள்?"

என்று கேட்டுக்கொண்டே மெதுவாக மான்கொம்புவின் பக்கம் வந்தாள் கண்ணம்மாள்.

மான்கொம்பு அவள் பக்கம் திரும்பினுன்.

- தொடரும் -

ஆண்ட அழகி

★ ஜோசப் பெஸ்கி, பி. ஏ. ★

‘உல்லாச விளையாட்டுக்களும் சல்லாப வாழ்க்கையும் உங்களுக்கு மட்டும் சொந்தமல்ல அதில் எமக்கும் உரிமையுண்டு’ என எக்காளமிட்டு எழில் மிகு வாலிபத்தின் இணையற்ற கோலாகல விளையாட்டுக்களிலெல்லாம் தனது நாட்டத்தைச் செலுத்தி அதை அப்படியே ரோமிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொண்டு இன்பத்தின் உச்சநிலையை கான்ஸ்டான்டிநோபிள் எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த காலம். பசி என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் பயங்கரமான மிருகங்களுக்கு மக்களையும் அடிமைகளையும் பலியாக்கி அந்த கோரமிகு காட்சியைக் கண்டு கோமான்களும் பூமான்களும் பூரித்துக்கொண்டிருந்த காலம். அந்தப் பயங்கர மிருகங்களை பழக்கும் ஒரு வீரனின் மகளாக கி. பி. 508-ம் ஆண்டு பிறந்தாள் **தியோடோரா**. அவள் பிறந்த சிறிது காலத்தில் அவளது தந்தைகொடிய கரடி ஒன்றினுல் கொல்லப்பட்டார். விதவையான அவளது தாய் தனது மூன்று குழந்தைகளைக் காப்பாற்றும் பொருட்டு ரத்தத்தை வியர்வைக் குளமாக்கி, சித்தம் கலங்க உழைத்தாள். குமரிப்பருவம் அடைந்த அந்த ‘குழந்தைகள்’ பொருளாதார நெருக்கடியை உணர்ந்து கண்ணுடியும் கையுமாக கதவோரத்தில் நிற்க ஆரம்பித்தனர். கி. பி. 520-ம் ஆண்டு தியோடாரா நாடகத்தொழிலில் நுழைந்து நடிப்புப் பயிற்சியை கற்று நாடக நடிகையானுள். நடிகை, நாட்டினரின் பொதுச் சொத்து என்று மக்கள் கருதி வந்த காலம் [illegible] நையாண்டிக்கும் அஞ்சாது நாலு பேர் மத்தியிலே பல்லெல்லாம்தெரியக் காட்டி, பருவிரல் ஒன்று கூட்டி, பார்ப்பவர் மனதைச் சொக்க வைக்கும் அந்தத் தொழிலை செய்து வந்தாள். நடிகை என்ற காரணத்தினுல் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கப்பட்டு, மனித ஜாதிக்கும் கீழான ஒரு நிலையில், மிருகங்களுக்கு ஒப்பான ஒரு கேவல வாழ்க்கையை நடத்தி வந்தாள். அலுத்து அயர்ந்து போன கான்ஸ்டான்டிநோப்பிள் நகரத்து மக்களுக்குத் தனது நடிப்பின் மூலம் உற்சாகமூட்டும் ஒரு மாபெரும் தொழிலைச் செய்தும் சமுதாயம் அவளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

ஹெக்கிபோலெஸ் என்பவன், தான் பென்டபோலிஸ் என்ற பிரதேசத்திற்கு கவர்னராக நியமிக்கப்பட்டதை கொண்டாடும்பொருட்டு ஒரு மாபெரும் விருந்து நடத்தினுன். அந்த விருந்தில் ஆடுவதற்காக தியோடோரா அழைக்கப்பட்டாள். விருந்தில் ஆட வந்தவள் தனது நடிப்பின் மூலம் அவன் உள்ளத்தைக் கவர்ந்து அவனுடன் ஆப்பிரிக்காவில் உள்ள பென்ட்போலிஸுக்குச் செல்லும் பாக்கியம் பெற்ருள். வந்த இடத்தில் ஒழுங்கு தவறி, கண்டவன் ஒருவனுடன் கொஞ்சியதைக் கண்டுகொண்ட ஹெக்கிபோலஸ் அடித்துத் துரத்திவிட்டான். நம்பினவனுக்கு துரோகம் செய்த அந்த நடிகை நாடெல்லாம் நாய்போல அலைந்தாள். உண்ண உணவின்றி, உறங்க இடமின்றி வீடு வீடாக ஏறி இறங்கினுள். கடைசியில் அலெக்ஸாண்டிரியாவில் ஆன்டியாக் வியாபாரி ஒருவனுடன் நட்பு பூண்டாள். சுயநலவாதியான அவன், தான் ஒரு சூதுக்காரன் என்பதை நிரூபிக்க காரியம் முடிந்தவுடன் அவளைக் கைவிட்டுவிட்டு ஓடிவிட்டான். சொல்லமுடியாத வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்த நடிகை தியோடோரா தற்கொலை செய்துகொள்ளலாமா என்றுகூட நினைத்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிருர்கள். நாடோடி வாழ்க்கையில் வெறுப்புற்ற அவள் தன் சக நடிகையான மாசிடோனியா என்பவனிடம் ஒரு சிபார்சுக் கடிதம் பெற்றுக்கொண்டு அப்பொழுது கான்ஸ்டான்டிநோப்பிளை ஆண்டுகொண்டிருந்த மன்னன் ஜஸ்டினியனை காணச் சென்ருள். பயங்கர கட்டுக் காவலையும் காவலர்களதுசீற்றத்தையும் தாண்டி மன்னனைக் கண்டாள். தனக்கும் ஒரு நல்ல காலம் வரும் என்ற எண்ணத்தோடு. வறுமையின் கோரப் புயலால் தன் வாலிபத்தை பலருக்கு விருந்தாக்கியிருந்தாலும் வனப்பும் வசீகரமும் மிகுந்த அவளது மேனியழகில், மன்னன் ஜஸ்டினியன் மயங்கிவிட்டான். அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற நிலைக்கு மன்னன் வந்துவிட்டான். அன்றைய ரோம் நகரத்துச் சட்டம் நடிகை திருமணம் [illegible] வில்லை. எனவே மன்னன், நடிகைகளும் தங்களுக்கு விருப்பமான ஆடவரை திருமணம் செய்துகொண்டு வாழலாம் என்று ஒரு சட்டத்தை இயற்றினுன். கி. பி. 523-ம் ஆண்டு நாடக மேடை நடிகை தியோடோரா நாடாளும் வேந்தனின் மனைவியானுள். காலம் தன் கடமையைச் செய்து காலத்தை எதிர் நோக்கிய அக்காரிகையும் கட்டவிழ்த்துவிட்டாள் தன் அதிகார பலத்தை. நாடே நடுங்கியது அந்த நாடகக்காரியின் குரல் கேட்டு. ராணியான அவளை நடிகை என்று சொன்னவர்களெல்லாம் குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர். மன்னன் ஜஸ்டினியனே அந்த மாநிலத்தையே மறந்து அவள் மடியில் தவங் கிடந்தான். தான் நடிகையாயிருந்த காலத்தில் தன்னை துன்புறுத்தியவர்களையும் தன்னை ஏசிய இழி மொழியாளர்களையும் அவள் மறக்கவில்லை. அரசியானதும் அவ்வளவு பேரும் பயங்கரமான முறையில் பழிவாங்கப்பட்டனர். துன்பத்தின் அடித்தளம்வரை சென்ற அவள் அரசியானதும் கொடுமையின் உச்சிவரை சென்றுவிட்டாள். நடிகை என்போரின் நா அறுபட்டது. அரசியினதுபழையதொழிலைப் பற்றி யார் வாய் திறந்தாலும் குரூரமான முறையில் கொல்லப்பட்டனர். இளமையிலே ஏசலையும் தூற்றலையும் நையாண்டியையும் கண்டு இறும்பாகிப் போன அவளது இதயம் இந்த ரத்த வெள்ளத்தை கண்டு கைகொட்டிச் சிரித்தது. கான்ஸ்டான்டிநோபிளில் உள்ள பல பெரிய பிரபுக்களிடமிருந்து சொத்துக்களை பிடுங்கி அதை அரசாங்கத்திற்கு உரியதாக்கினுள். அநேக பிரபுக்கள் கொல்லப்பட்டனர். ரத்தத் தடாகத்திலே நீந்திச் செல்லும் மண்டை ஓடுகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தினுலும் பிரசித்தி பெற்ற ‘ஜஸ்டினியன் [illegible] சொல்லப்படுகிற அந்த சட்ட திட்டங்களை வகுப்பதற்கு மன்னனுக்கு பெரிதும் உதவி செய்தாள். ஜஸ்டினியனின் விரோதிகள்கூட தங்கள் மன்னன் ஒரு **அழகுமிகுந்த** ஆணவக்காரிக்குஅடிமையாகஇருக்கிருன் என்ருர்கள். அத்தனை இருந்தும் தன் பரம்பரையை வளர்த்து வைக்க ஓர் மகவு இல்லையே என்ற கவலை அவள் நெஞ்சைக் குடைந்தது.

மதுவும் மங்கையுமென மாளிகைவாசிகள் போக போக்கியத்தில் புரண்டுகொண்டிருந்தனர். மக்களோ பசி, வேலையில்லாத் திண்டாட்டம், வியாதி, முதலியவைகளால் நாலாபுறமும் தாக்கப்பட்டு துன்பத்தின் கரங்களை அணைத்தபடி கான்ஸ்டாண்டிநோப்பிள் நகரத்து தெருக்களில் உருண்டனர். வறுமையும் வாட்டமும் தூங்கிக் கிடந்த மக்களின் தோள்களை தட்டி எழுப்பிற்று. புரட்சி கிளம்பியது. ஜனவரி மாதம் 11-ம்தேதி ஞாயிற்றுக்கிழமை மக்கள் அரசியின் யதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்துக் கலகம் செய்தனர். கேளிக்கை மண்டபத்திலே கூடியிருந்த மக்கள் ‘அரசி ஒழிக’ கொடுங்கோல் ஆட்சி வீழ்க’ எனக் கூக்குரலிட்டனர். அப்பொழுது அரசி தியோடோரா ஸெயிண்ட் ஸ்டீபன் ஆலயத்தில் இருந்தாள். மன்னனே மக்கள் தேவையை உணராது கலகத் தலைவர்களின் தலைகளை பந்தாடுமாறு உத்தரவிட்டான். ஏழு கலகத் தலைவர்கள் கொல்லப்பட்டனர். ஆனுல் கலகம் நகரம் முழுவதும் பரவிவிட்டது. கற்களையும், கத்திகளையும், தடிகளையும் எடுத்துக் கொண்டு மக்கள் அரண்மனையை நோக்கி படையெடுத்னர். அரண்மனையின் ஒரு அறையில் மன்னன் கலகக்காரர்களுக்குபயந்து ஒளிந்துகொண்டான். வியாதியால் படுத்திருந்த அரசியின் தூக்கம் மக்களின் கூக்குரலால் கலைக்கப்பட்டது. மாபெரும் அந்த மக்கள் சக்தியைக் கண்டு மாஜி நடிகை நடுநடுங்கவில்லை. தைரியமாக அவர்கள் முன் காட்சி தந்து திகைப்படைந்து நின்ற அவர்களிடம் “உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் கொடுக்கப்படும்” என்ருள். ‘ரொட்டி வேண்டும்’ என்று கூட்டத்தினர் கூக்குரலிட்டனர். பசியைத் தாங்கமுடியாத அந்த மக்கள் ரொட்டிமட்டும் கேட்டனர். ராணியோ உங்களுக்கு [illegible] தரப்படும் என்ருள். ராணி தியோடாரா வாழ்க என மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்கள் கலைந்து சென்றனர். அவர்களுக்கு வரப்போகும் ஆபத்தைக் கண்டு தன் மனதுக்குள்ளே சிரித்துக்கொண்டாள் அந்த மகாராணி. தியோடோராவின் சொந்தச் செலவிலே மக்களுக்கு வயிருர ரொட்டி கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆடல், பாடல், பந்தயப்போட்டி, கேளிக்கை அத்தனையும் நடந்தன. கூத்தும் கும்மாளமும் முடிவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னதாகவே அரசனும் அரசியும் சென்றுவிட்டனர். அரசியின் தயாள குணத்தையும் அவளது இரக்க சுபாவத்தையும் மக்கள் வாயார வாழ்த்திக்கொண்டிருந்த அந்த சமயத்தில்தான் நாலா பக்கத்திலிருந்தும் அரசாங்கப்படைகள் சேனைத் தளபதி பெலிசேரியஸ் தலைமையில் தாக்க ஆரம்பித்தனர். ஆயுதம் எதுவுமில்லாமல் நிராபாணியான மக்கள் அரண்மனைப் படை வீரர்களால் அடித்து நொறுக்கப்பட்டனர். அரசியின் சதித் திட்டத்தை அப்போதுதான் உணர்ந்துகொண்ட அந்த மக்களால் எதையும் செய்யமுடியவில்லை. அரண்மனை படை வீரர்களின் வாளுக்கு இரையான மக்கள் தொகை 30,000 எனக் கணக்கிடுகிருன் வரலாற்று ஆசிரியன் கிப்பன். பயங்கரமான அந்தத்தாக்குதலினுல் நகரமே ரத்தக்குளமாகக் காட்சியளித்தது. ஏசலைக் கணையாக்கி ஏவிய அந்த கான்ஸ்டாண்டி நகரத்து மக்கள் மீது பயங்கரமான முறையில் வஞ்சம் தீர்த்துக்கொண்ட ராணி தியோடோராவை கி. பி. 548-ம் ஆண்டு சாவு அணைத்துக் கொண்டது. கொடுமைக்கும் குரூரத்திற்கும் அவள் பெயர் பெற்ருலும் அவள் ஒரு சிறந்த ராஜதந்திரி என வரலாற்று ஆசிரியர்கள் போற்றுகிருர்கள். ★

மகிழ்ச்சிக்குரிய செய்தி!

முல்லை

ஆசிரியர் : கண்ணதாசன்

தனி இதழ்
விலை அணு எட்டு

★

தோழர்

டி. கே. சீனிவாசன்

எழுதும்

சிறுகதைகள்

‘முல்லை’யில்

தொடர்ந்து வெளிவரும்

முல்லை : : சென்னை-6.

198384

வெண்பாப் போட்டி

17. கலைகடந்து தோன்றுதே கால்.

நல்லதமிழ் காத்த நடராசன் தாளமுத்து
இல்லையென்றீர்; எங்கும் இருப்பதாய்ச்—சொல்ல
அலைவீசுந் தென்ற லசைவோடு நின்று
கலைகடந்து தோன்றுதே கால்.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

விழியால் மொழிபேசும் விண்ணகத்துத் தாரா"ய்
சுழியாத நெஞ்சில்லை உன்பால்—எழிலாய்க்
கலையுடுத்தும் காரிகையே, கண்ணாடி தோற்கும்
கலைகடந்து தோன்றுதே கால்.

—தா. அ. மாரிமுத்து, குருசாமிபாளையம்.

பாட்டாளி மக்கள் பசிப்பிணியும் கண்ணீரும்,
நாட்டில் பெருகுவதால் நாள்தோறும்—ஏட்டி!
உழைத்தும் பழங்கந்தல் சூடுகிறார் ஐயோ
கலைகடந்து தோன்றுதே கால்.

—கு. பரிமளம், கமுதி.

அன்ன நடைபோடும் ஆரணங்கே!—வண்ண
விலையுயர்மென் னுடை நனைந்ததினு லந்த
கலைகடந்து தோன்றுதே கால்.

—எழிலன், நெய்வேலி.

ஆடியிலே நல்லுழவர் அங்கிங்கும் சென்றோடித்
தேடி விதைத்திடுவர் சீர்விதையை—நாடித்
தலைத்திங்க ளிம்மாரி பெய்தல் சரியோ?
கலைகடந்து தோன்றுதே கால்.

—ஓடை. இரா. வடிவேலன், பேரோடு.

வண்டுவிழி கொண்டெனை வட்டமிடும் கோல்வளையை
உண்டுநின்றேன் என்விழியால்! என்னென்பேன்!—வண்ணக்
கலையணிந்த 'கள்ளி'க்கு, வெண்ணிலவின் வெண்மைக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—எஸ். கே. சாகுல்அமீது, சென்னை-21.

ஈழத்தில் ஏங்கியழும் என்தமிழா எங்குமினி
வாழ வகையின்றி வாடுகிறாய்—ஆழ
அலைகடக்க எண்ணுவதால் ஓரளவு துன்பக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

தேன்மழலை சிந்தும் சிறுமலரே! வானத்து
மீனே! தமிழே! முழுநிலவே—சினச்
சிலையே! திரிந்தோடித் தேருருட்டும் போது
கலைகடந்து தோன்றுதே கால்.

—ந. அலி, துறையூர்.

தேனின் இனிச்சுவையே தென்றற் றிருமலரே
வானின் ஒளிரும் மதிமுகமே--நாணிலா
மலைகடந்த பேருருவே மாமயிலே யாடற்
கலைகடந்து தோன்றுதே கால்.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி

சின்ன இதழ்விரித்துச் சிங்காரக் கைக்குழந்தை
உன்மார்பில் பாலுண்ணும் போதினிலே--அன்பால்
நிலைமறந்து தானிருக்கும் பாவையே! பாராய்
கலைகடந்து தோன்றுதே கால்.

—கு. பழநி, நெய்வேலி.

கல்லடியில் கால்சிவக்கத் தன்தலைவன் பின்னாலே
மெல்லடி நோவ விரைகின்றாள்--மெல்லி;
அலையன்ன கூந்தல் அவிழ்ந்தாடச் செம்மைக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—இரெ. பன்னீர்செல்வன், பெருமாள்பாளையம்.

பல்லிதழால் வள்ளிதரும் பள்ளியறை முத்தங்கள்
கொள்ளையின்பம் சொல்லிமனம் துள்ளுதடி!--உள்ளம்
அலைகடலாய்க் கொந்தளிக்கும் அன்பே! [illegible]ன் இன்பம்
கலைகடந்து தோன்றுதே கால்.

—சு. கந்தசாமி, நாமக்கல்.

வட்ட முகத்தழகி! வாடாத பெண்ணழகி
பொட்டுக் [illegible]லத்தும் பொழுதிருக்க--மொட்டும்
கலைந்ததுஏன் [illegible]லுழைப்பின் காரணமோ! ஆமாம்,
[illegible]கடந்து தோன்றுதே கால்.

—செ. வெற்றிமன்னன், கணேசபு[illegible]ம்.

மான்விழியும் தேனிதழும் வான்மதியோ டொன்றுபட்டு
கானகத்து நற்கனியாய்க் காய்த்ததுபோல்--காணப்
புலப்படுதே உன்னெழிலும், பார்வையே உன்றன்
கலைகடந்து தோன்றுதே கால்.

—மு. வரதராசன், துறையூர்.

அலையன்ன கூந்தல் அனங்கே அலையாச்
[illegible] வாடுகிறேன்;--வெட்கிக்; அத்துறல்
கலைகடந்து தோன்றுதே கால்.

—நாகரத்தின. அறிவானந்தம், பெருமாள்பாளையம்.

அவனும் அவளுமாய் சென்றடைந்தார் சோலை;
சிவப்பேறி சூரியனும் சாய்ந்தான்;--உவப்பால்
தலைவி நடைபயின்றாள்; தென்றல் வீச
கலைகடந்து தோன்றுதே கால்.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

பணத்தாலே தோன்றும் பகட்டான வாழ்வில்
குணமுள்ள இன்பம் குவியா--தினமும்
குழவிமொழி கேட்கும் குடும்பத்தில் இன்பக்
கலைகடந்து தோன்றுதே கால்.

—வே. கருப்பையா, [illegible]தகுபட்[illegible].

சின்னக் கண்ணுக்குச் சித்திர மையெழுதி
அன்னந் தனைப்பழித்த ஆரணங்கு--கண்முன்
சிலைவடிவாய் நின்றேதான் சீர்நடன மாட
கலைகடந்து தோன்றுதே கால்.

—தங்கை-மணியம், உடுமலைப்பேட்டை.

முதல் [illegible]ம்
[illegible]க்கும் கிடைக்கும்!
முல்லை
ஜூன் இதழ்

பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு